# இந்திராகாந்தி மகன் சஞ்சய் காந்தி சிறையில் வைக்கப்பட்டார்!

பக்கங்கள் 8 விலை சதம் 40 ★

ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 சித்திரை 23 ஐ. அவ் 27 இதழ் 84
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 6-5-78

புதுடில்லி, மே 5

**முன்னாள் இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியின் மகன் திரு. சஞ்சய் காந்தி இன்று சிறையில் வைக்கப்பட்டார்**

**அவர் மீதான கிரிமினல் வழக்கொன்றில் வழங்கப்பட்டிருந்த பிணையை சுப்ரீம்கோட் ரத்துச் செய்ததைத் தொடர்ந்து திரு காந்தி கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார்**

திரைப்படம் ஒன்று தொடர்பாக இவர் மீதான ஒரு வழக்கும் முன்பு திரு. சஞ்சய் காந்திக்கு ஜாமீன் வழங்கப்பட்டிருந்தது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட அரசாங்க தரப்பு சாட்சிகளைத் தம்வசப்படுத்த முயன்றதாக இந்த ஜாமீன் சுப்ரீம்கோர்ட்டினால் ரத்துச் செய்யப்பட்டது. இதன்பேரில் அவரை ஒருமாதகாலம் காவலில் வைக்கும்படி சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது.

திரு. காந்தி இன்று கைது செய்யப்பட்டு டில்லியிலுள்ள ஒரு சிறைக்கு கொண்டு போகப்பட்டார்.

# இ. போ. ச. நிர்வாகம் பன்முகப்படுத்தப்படும்

## தனியாரிடம் நிர்வாகத்தை ஒப்படைக்கும் நோக்கமில்லை

### பேரவையில் அமைச்சர் முகமது உறுதி

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்துச்சபையை தனியார்துறையிடம் ஒப்படைக்கும் நோக்கம் அரசுக்குக் கிடையாது என்று நேற்று தேசிய அரசுப் பேரவையில் போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகமது உறுதியளித்தார்.

இ. போ. சபையின் நிர்வாகத்தைப் பன்முகப்படுத்தும் சட்டமூலம் நேற்று பேரவையில் நிறைவேறியது.

இதன்படி மத்திய நிலையம் ஒன்றும் 9 பிராந்திய நிலையங்களும் நிறுவப்படவிருக்கின்றன.

மதவாச்சி உறுப்பினர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா இந்தச் சட்டமூலமான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் இ. போ. சபைப் பன்முகப்படுத்தும் திட்டத்தைக் கண்டித்தார்.

நல்லூர்த்தொகுதி உறுப்பினர் திரு எம். சிவசிதம்பரம், திருகோணமலை உறுப்பினர் திரு. சம்பந்தர் ஆகியவர்கள் இத்திட்டத்தை ஆதரித்துப் பேசினர்.

அமைச்சர் ஜனாப் முகம்மது விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசியபோது. மக்களுக்கு சிறந்த போக்குவரத்தைச் செய்து கொடுக்கும் நோக்கத்துடனேயே இத்திட்டம் கொண்டுவரப்படுகின்றது. போக்குவரத்துச்சபையை தனியாரிடம் கையளிக்கும் நோக்கம் அரசுக்கு கிடையாது என்றார்.

பஸ்சேவையை சீர்செய்வதற்காக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 641 புதிய பஸ்களும் 534 திருத்தப்பட்ட பஸ்களும் சேவையில் விடப்பட்டுள்ளன வருட இறுதிக்குள் 1281 புதிய பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றார் அமைச்சர்.

[8ம் பக்கம் பார்க்க]

## 220 பேர் தங்கம் வாங்கினர்

புதுடில்லி, மே 5

இந்திய அரசு தங்கத்தை ஏலத்தில் விட முடிவுசெய்ததின் காரணமாக 220 பேர் முதலில் தங்கம் வாங்கும் தகுதியைப் பெற்றனர். நேற்று இவர்களுக்கு 4,92600 கிராம் தங்கம் வழங்கப்பட்டது. ஏறக்குறைய அரை தொன் தங்கம் இப்பொழுது விற்பனையாகியுள்ளதாம்.

தங்கம் ஏலவிற்பனையை அடுத்து வெளிச்சந்தையில் 10 கிராம் தங்கத்தின் விலை 30 ரூபாய் வரை குறைந்தது என்று அறிவிக்கப்பட்டது.

அணிசேரா நாடுகளின்

## அமைச்சர்கள் மகாநாடு கியூபாவில்!

நியூயோர்க், மே 5

அணிசேரா நாடுகளின் அமைச்சர்கள் மட்ட மகாநாடு கியூபா தலைநகரான ஹவானாவில் நடைபெறும்.

நியூயோர்க்கின் கூடிய அணிசேரா நாடுகள் இணைப்புச் செயலக அதிகாரிகள் இந்த முடிவை எடுத்தனர்.

மகாநாட்டை ஹவானாவில் நடத்த கியூபா அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலில் இந்த மகாநாடு முன்பு நடப்பதாக இருந்தது. அங்கு ராணுவப்புரட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்த மகாநாட்டை கியூபாவில் நடத்துவதென இப்பொழுது முடிவு செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 17ந் திகதி ஹவானாவில் அணிசேரா நாடுகளின் அதிகாரிகள் கூட்டம் ஆரம்பமாகும், 17ம் திகதிமுதல் 20ம் திகதிவரை அணிசேரா நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் மகாநாடு நடைபெறும்.

## தேசிய மகாநாட்டுக்கு இப்போதே ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தேசிய மாநாட்டையொட்டி வடபகுதியிலுள்ள சகல இளைஞர்பேரவைக் கிளைகளும் புனரமைக்கப்பட்டு பல ஆயிரக்கணக்கான புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

தேசியமாநாட்டுக்கு தீர்மானங்கள் சமர்ப்பிக்கவிரும்பும் இளைஞர் பேரவைக் கிளையினர் தமது தீர்மானங்களை யூன் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் தலைமையகத்துக்கு அனுப்பிவைக்குமாறு கோரும் கடிதங்கள் ஒவ்வொரு கிளைக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கடந்தமாதம் நடைபெற்ற கூட்டணியின் செயற்குழு முடிவின்படி தலைமை மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு செ. இராசதுரை இதுவரை மட்டக்களப்புத் தொகுதியில் கூட்டணி அமைப்பு வேலைகளில் ஈடுபடவில்லை. மே மாதம் 2ம் திகதிவரை செயற்குழு காலவரை விதித்திருந்தது. திரு. ராஜதுரை நடவடிக்கையில் ஈடுபடாதது குறித்து கூட்டணியின் சமரசக் குழுவினர் திரு. இராஜதுரையைச் சந்தித்து நிலைமையை தெளிவுபடுத்துமாறு கோரவுள்ளதாக கூட்டணி வட்டாரங்கள் கருத்துத்தெரிவித்தன (செ)

## வெளிநாட்டிலிருந்து இலங்கை திரும்பும் சிறுவர்களுக்குச் சலுகை

[கொழும்பு]

வெளிநாட்டில் இப்பொழுது தங்கியிருக்கும் இலங்கையர்களின் குழந்தைகளுக்கு பாடசாலைகளில் போதனாமொழிகளில் சலுகை வழங்கப்படும்.

வெளிநாடுகளிலிருந்து இலங்கை திரும்பும் இந்தச் சிறுவர்கள் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு ஆங்கிலமொழியிலேயே கல்விகற்க வசதியளிக்கப்படும்.

(8ம் பக்கம் பார்க்க)

## பௌத்த சின்னங்களை தரிசித்த இந்துக்கள்

### வடக்கே கொண்டுவரவும் கோரிக்கை

[கொழும்பு]

இந்தியாவில் கபிலவஸ்துவிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ள புத்தரின் புனிதசின்னங்களை வடபகுதிக்கும் கொண்டுவரவேண்டுமென இந்துக்கள் சிலர் கோரிக்கை விடுத்திருக்கிறார்களாம்.

அண்மையில் சாவெட்டியிலும் அச்சுவேலியிலுமிருந்து கொழும்புக்கு வந்தசிலர் இந்தக் கோரிக்கையை கலாசார அமைச்சரிடம் விடுத்துள்ளனர் இவர்கள் புத்தரின் புனித சின்னங்களைத் தரிசித்ததுடன் அதன் அருகில் இருந்து பிரார்த்தனையும் புரிந்தனர்.

கபிலவஸ்து புனிதச்சின்னங்கள் இப்பொழுது நாட்டின் தென்பகுதியில் மக்களின் தரிசனத்துக்காக பல்வேறு இடங்களுக்கும் பவனியாக எடுத்துச் செல்லப்படுகின்றது பௌத்த மக்கள் மிக பக்திசிரத்தையுடன் புனித சின்னத்தை தரிசித்துவருகிறார்கள்.

# நெல் குத்தும் ஆலைகள் நாடுமுழுவதும் நிறுவப்படும்

## ப. நோ. கூ. சங்கங்களுக்கு ஊக்கம்

(கொழும்பு)

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அரிசிஆலைகளை நிறுவும் திட்டம் ஒன்றை உணவு கூட்டுறவு அமைச்சு ஏற்பாடு செய்துவருகின்றது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அரிசி ஆலைகளை நிறுவுவதற்கு ஊக்கமும் உதவியும் அளிக்கப்படும். இதற்காக சுமார் 3 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்கப்படும்.

நெல் உற்பத்தியாகும் பகுதிகளில் நிறுவப்படும் இந்த ஆலைகள் அப்பகுதிகளில் நெல்லைக் கொள்முதல்செய்து குற்றிய அரிசியை அப்பகுதியிலேயே விநியோகிக்க ஏற்பாடுசெய்யப்படும்.

ஹிரியாலையில் இன்று உணவு அமைச்சர் திரு எச். பி. ஹேரத் இப்படியான ஒரு அரிசிஆலையைத் திறந்துவைக்கவிருக்கிறார் இம்மாதிரியான ஆலைகள் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் விஸ்தரிக்கப்படும்.

UNIVERSITY OF SRI LANKA ... PERIODICALS DIVISION ... LIBRARY

# வரி விளம்பரம்

## தேவை

நுணுவில் சந்திக்கு அருகாமையிலும், ஊரெழு பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையிலும் உள்ள ஜனதாபீடி உற்பத்தி தொழிற்சாலைகளில், பீடி சுற்றுவதற்கு அனுபவமுள்ள பெண்தொழிலாளர்கள் உடன் தேவை. பயிற்சிபெற விரும்புபவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவர். விபரங்களுக்கு கடிதம் மூலம் அல்லது நேரில் தொடர்பு கொள்ளவும். வசந்தாஸ் மோட்டோர்மார்ட், 44, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9221

சேவிஸ் ஸ்ரேசனில் வேலை செய்வதற்கும், பழகுவதற்கும் வேலையாட்கள் தேவை. தொடர்பு கொள்க: நல்லூர் சேவிஸ் ஸ்ரேசன், நல்லூர். 9227

யாழ்ப்பாணத்தில் புதிய நிர்வாகத்தின்கீழ் நடத்தப்பட இருக்கும் வாகன சேவிஸ் ஸ்ரேசனுக்கு சேவிஸ் செய்வதற்கும், கழுவுவதற்கும் ஆட்கள் தேவை. விளம்பர இல. 9226 மே/பா. ஈழநாடு யாழ்ப்பாணம். 9226

கண்ணாடித் தொழிற்சாலைக்கு வேலை பழகியவர்களும் வேலை பழகுபவர்களும் தேவை நல்ல சம்பளம் கொடுக்கப்படும். நேரில் வரவும். சேவிஸ் ஆன் மெற்றல் வேக்ஸ், நீர்வேலி 9224

யாழ்ப்பாணத்தில் ரியூற்றிக்கு இடம் தேவை. கொடுப்போர் இடம், விலாசம், வாடகை முதலிய விபரத்தை 15-5-78 முன் அறிவிக்கவும் விளம்பர இல. 9223 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9223

கீழ்க்காணும் முகவரியிலுள்ள புடவை வியாபார நிலையத்திற்கு புடவைக்கடை அனுபவமுள்ள ஆள் தேவை. தொடர்பு கொள்ளவும்: அஜந்தாஸ், 54, பெரியகடை, யாழ்ப்பாணம். 9234

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள மொறிஸ் மைனர் EN 2000 சிறிய ரக்ஸி மீற்றர் உடன் விற்பனைக்கு உண்டு. No. 1, குமார வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். போன். 7364. 9216

"வைத்தியர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் உகந்த சுத்தமான நல்லெண்ணெய் மொத்தமாகவும், சில்லறையாகவும் எம்மிடம் கிடைக்கும். தொடர்பு கொள்ளவும்: ராதா ஒயில் மில், 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9182

## வகுப்புக்கள்

பொம்மை, பறவைகள், முதலிய விளையாட்டுப் பொருட்கள், சவர்க்காரம், பன்னீர், அத்தர் முதலிய வாசனைப் பொருட்கள் செய்தல், நவீன உடைகள் வெட்டவும், தைக்கவும் பழகல், ஒலையாலும், பிளாஸ்ரிக்காலும் பைகள் பின்னப் பழகல் 8-5-78 இல் ஆரம்பமாகும். பள்ளிக்கூடங்களுக்குச் செல்வோர் பின்நேரங்களிலும், சனிக்கிழமைகளிலும் பழகலாம். பழகிய பின்னர் இங்குள்ள கைத்தொழில் நிலையத்தில் வேலைவாய்ப்புக் கிடைக்கும். யாழ்ப்பாணக் கல்வி நிலையம், 22, இராமையா செட்டியார் லேன், யாழ்ப்பாணம். 9228

G.C.E. O.L. விஞ்ஞான, கலை, வர்த்தக ஆவணி, மார்கழிப் பரீட்சைகளுக்குரிய காலை, மாலை வகுப்புகளும், A. L. காலை, மாலை வகுப்புக்களும் நடைபெறுகின்றன. O. L. துரித மீட்டல் வகுப்புக்கள் 8-5-78 இல் ஆரம்பமாகும். I.C.M.A., A.C.C.A. I.B.K., Chartered accountants, Banking வகுப்புக்கள் 20-5-78 இல் ஆரம்பமாகும். யாழ்ப்பாணக் கல்விநிலையம், 22, இராமையா செட்டியார் லேன், யாழ்ப்பாணம். 9229

### கல்வி

நீங்கள் திறமையான ஒரு வெல்டர் (WELDER) ஆகி போதியளவு பணம் சம்பாதிக்க இத்துறையில் அனுபவம் பெற்றவர்களால் குறுகிய காலத்தில் திறமையான பயிற்சி அளிக்கப்படும். சிறிய வகுப்புகள், குறைந்த கட்டணம், இலவச ஆங்கில வகுப்புகள் (வெளிநாட்டுக்கு போவதற்கு ஏற்றதாக) பிரித்தானிய ஒக்ஸிஜின் கம்பனியின் பயிற்சி முறைகள், ஆங்கில அறிவு குறைந்தவர்கள் தனியாக கவனிக்கப்படுவார்கள். தமிழில் தெளிவாக விளக்கம் கொடுக்கப்படும். மேலும் விபரங்களுக்கு நேரில் வரவும். அல்லது உங்களுடைய பெயர் முகவரியை எமக்கு அனுப்பவும். அத்துடன் மேற்கு ஜேர்மன் நாட்டின் கலை, கலாச்சாரம், மொழி இலவசமாக கற்க எம்முடன் தொடர்பு கொள்ளவும். அதிபர், ஜேர்மன் வெல்டிங் தொழிற் பயிற்சி நிலையம், பதிவுசெய்யப்பட்டது], பட்டினசபை ஒழுங்கை, மானிப்பாய். 9233

### அடைவு நகை ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் 150 பிறவுண் வீதி, இன்னத்துரை இராசரத்தினம் அவர்களிடம் 1-3-1977 திகதிக்கு முன் அடைவுவைத்து மீட்கப்படாத நகைகள் 31-5-1978 புதன் கிழமை காலை 9 மணி தொடக்கம் மேற்படி அடைவுக்கடையில் வைத்துப் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

சி. மகாதேவன்
ஏலவிற்பனையாளர்.

643, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 9215

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


**ARO வெல்டிங் ரான்ஸ்போமர்**

வாயுவும் மின்சாரமும் (Gas & Electric) சேர்ந்த வெல்டிங் இயந்திரங்கள் மிகவும் மலிவாகவும் குறுகிய காலத்திலும் பெறக்கூடியது.

**Arul Bros & Co., (P'vt) Ltd.**

Pandateruppu.

தபால்மூலம் தொடர்பு கொள்ளவும்.

நேரில்: Mahendirarajah & Co.,
Stanly Road,
Jaffna 9217


# கேள்வி விளம்பரம்

## பனங்காமம் கிராமப் பிரதேசம்

கீழ்க் காணும் வேலைகளுக்கு ரூபா 5000/-க்கு மேற்படாத பதிவுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் வரவழைக்கப்படுகின்றன. கேள்விப்பத்திரம் ஒவ்வொன்றும் ரூபா 10/- 14-5-1978ந் திகதி வரை இக்கந்தோரில் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரப் பிரதி ஒன்று பனங்காமப் பிரதேச விசேட ஆணையாளர்க்குக் கிடைக்கும் நேரத்திலேயே மன்னூர்ப் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்க்கு அனுப்பப்படவேண்டும். கேள்விகள் கடைசியாகப் பெறும் தினம் 16 5-1978ம் திகதி 9-30 மணியாகும்.

வேலைகள் விபரம்

[1] நட்டாங்கண்டல் பாண்டியன் குளம் ரோட் பகுதி 4.

[2] பாண்டியன் குளம் நட்டாங்கண்டல் ரோட்டுத் திருத்தம்.

(ஒப்பம்)

க. குலேந்திரா
விசேட ஆணையாளர்
பனங்காமம் கிராமப் பிரதேசம்,
பாண்டியன்குளம்,
வவுனிக்குளம்,
2-05-78.

பனங்காமம் கிராமப் பிரதேச விசேட ஆணையாளர் அலுவலகம்,
பாண்டியன்குளம்,
வவுனிக்குளம். 9230

# நூலக பரிசகர் பதவி வெற்றிடம்

## நல்லூர் கிராமாட்சி மன்றம்

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 19-5-78ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல்வேண்டும்.

தகைமைகள்

(1) நல்லூர்க் கிராமசபை எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல்வேண்டும்.

(2) 22 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப் பட்டவராக இருத்தல் வேண்டும்.

(3) கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் சித்தியடைந்தவராக இருத்தல்வேண்டும்.

குறிப்பு:
கிராமசபையில் ஏற்கனவே கடமைபுரியும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(ஒப்பம்)

ந. அமுதசாகரன்
விசேட ஆணையாளர்,
நல்லூர் கிராமாட்சி மன்றம்.

நல்லூர் கிராமாட்சி மன்றம்
யாழ்ப்பாணம்,
24-4-78 9232

# குளங்கள் திருத்தப்படும்

[உருத்திரபுரம்]

வவனிக்குளம், பாவற்குளம் ஆகியவை உட்பட ஐந்து குளங்கள் திருத்தியமைக்கப்படவுள்ளன.

இதற்கான பூர்வாங்க வேலைகளைச் செய்வதற்கு சுமார் 22 கோடியே 50 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 35 லட்சம் ஸ்ரேலிங் பவுணும் 50 லட்சம் அமெரிக்க டொலர்களும் வெளிநாடுகளில் இருந்து நிதி உதவியாக கிடைக்கவுள்ளனவாம்.

இக்குளங்கள் புதுப்பிப்பதால் சுமார் ஆயிரத்திற்கும் அதிகமான விவசாயக் குடும்பங்கள் பயன் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ]

# பல்கலைக்கழக பரீட்சைமுறை முற்றாக மாறும்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களின் பரீட்சை முறைகள் முற்றாக மாற்றி அமைக்கப்படவுள்ளன.

தற்போதைய பரீட்சைகள் திருப்திகரமாக இல்லாமையினாலேயே இம்முறைகள் மாற்றி அமைக்கப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் ஸ்டான்லி கல்பகே தெரிவித்துள்ளார்.

புதிய பரீட்சை முறைகள் பற்றி ஆராய புதிய ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவில் டாக்டர் கல்பகே உட்பட 4 பேர் அங்கம்வகிக்கின்றனர். (இ)

# பண்டிதமணிக்கு மே. 30ல் பட்டமளிப்பு

(யாழ்ப்பாணம்)

பண்டிதமணி கணபதிப்பிள்ளை இலங்கைப் பல்கலைக்கழகத்தினால் 'இலக்கிய கலாநிதி' என்ற பட்டமளித்துக் கௌரவிக்கப்படவுள்ளார்

இம்மாதம் 30ம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் வைபவத்திலேயே பண்டிதமணி பட்டமளித்துக் கௌரவிக்கப்படுவார். (இ)

# யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் ஏல விற்பனை

10-05-78 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு மின்சாரக் களஞ்சியத்தில் பாவித்துக் கழிக்கப்பட்ட பழைய கொங்கிறீற் தூண்கள், செம்புக் கம்பிகள், ஜீ. ஐ. குழாய்கள், அலுமினிய மின் விளக்கு மூடிகள் முதலியன பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். கூடிய கேள்விக்காரர் பணத்தை உடனடியாகச் செலுத்திப் பொருட்களை எடுத்துச் செல்லவேண்டும்.

(க. சிவஞானம்)
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
02-05-1978. 9235

# ஏழைகள் நல்வாழ்வுக்காக..!

[அரியாலை]

லயன்ஸ் கழகம் பின்தங்கிய நிலையில் வாழும் மக்களின் நல்வாழ்வுக்காக அளப்பரிய சேவைகளைச் செய்துவருகிறது. காந்தி சனசமூக நிலையம் இப்பகுதியில் வாழும் வறிய மக்களின் நல்வாழ்வுக்காக மேற்கொள்ளும் வேலைகளுக்கு எமது கழகமும் தனது பங்கைத் தவறாது செய்யும்.

இவ்வாறு அரியாலை மேற்கு காந்தி சனசமூகத்தின் 28வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட பாலர்களின் விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட லயன்ஸ் கழக உபதலைவர் திரு. ராஜேந்திரா பேசுகையில் குறிப்பிட்டார்.

காந்திசன சமூகநிலையமாதர் சங்கத் தலைவி திருமதி க. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் லயன்ஸ்கழக முன்னாள் தலைவர் திரு. எஸ். மகேசன், நிலையத் தலைவர் திரு. த. இராமலிங்கம், செயலாளர் திரு. எஸ். பி. ஜீவானந்தம் ஆகியோர் பேசினர்.

திரு. இராஜேந்திரா போட்டியில் வெற்றிபெற்றோருக்குப் பரிசில்களை வழங்கினார்.

# விளம்பரம்

## பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

[வரையறுக்கப்பட்டுள்ளது]

# பதவி வெற்றிடம்

| | | |
|---|---|---|
| (1) கணக்கு லிகிதர் தரம் | I | விண்ணப்பிப்போரின் வயது 18க்கும் 45க்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். (தற்போது கூட்டுறவு ஊழியராக இருப்போர்க்கு வயது எல்லை கவனிக்கப்படமாட்டாது ) |
| (2) பொது லிகிதர் தரம் | III | |
| (3) கொள்வனவு லிகிதர் தரம் | III | |
| (4) கிளை முகாமையாளர் தரம் | II | |
| (5) கிளைமுகாமையாளர் தரம் | III | |
| (6) விற்பனையாளர் | | |
| (7) காவலாளி | | விண்ணப்பிப்போரின் வயது 25க்கும் 50 க்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். |
| (8) தொழிலாளி | | |

மேற் குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வதிவுத் தகைமை

குறைந்தளவு 2 வருடங்கள் யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் வசிப்பவராய் இருத்தல் வேண்டும். எமது சங்க எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி

பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்களை 23-5-78ம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்புதல்வேண்டும்.

விண்ணப்பப் பத்திரம் மற்றும் தேவையான தராதரங்கள், சம்பளம், தகைமைகள் பற்றிய விபரங்கள் யாவையும் பெறுவதற்காக, கீழ்க் காணும் விலாசத்திற்கு எழுத்து மூலமோ அல்லது நேரடியாகவோ வந்து பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெறவேண்டின் முத்திரை ஒட்டப்பட்ட, சொந்த முகவரியிடப்பட்ட தபால் உறை அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் "தலைவர், பருத்தித்துறை பல. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை" என்ற விலாசத்திற்கு அனுப்புதல்வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்படுதல் முக்கியமாகும்.

தலைவர்
பருத்தித்துறை பல நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை

04-5-78 9231

ஈழநாடு
The Eelanaadu

## தங்கம் வெள்ளி இறக்குமதி

உள்ளூர் தங்க நகை செய்பவர்களுக்கும் கைவினைஞர்களுக்கும் தாராளமாக தங்கம், வெள்ளி, பித்தளை ஆகியவற்றை வழங்குவதற்கு சிறுகைத்தொழில் திணைக்களம் தீர்மானித்திருப்பதாக வெளிவந்துள்ள செய்தி மகிழ்ச்சியளிப்பதாகும்.

நகைத் தொழிலாளர்களுக்கு முன்னர் 'பர்மிட்' மூலம் தங்கம் வழங்கப்பட்டுவந்தது. கடந்த சில வருடங்களாக இது நிறுத்தப்பட்டிருந்ததால் நகைத் தொழிலாளர் குடும்பங்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகின. பல குடும்பங்கள் பட்டினிகிடக்க நேர்ந்தன. பலர் தமதுதொழிலையேகைவிட்டு வேறு தொழில்களில் ஈடுபடவேண்டியும் ஏற்பட்டது.

தங்கம், வெள்ளி ஆகியவைகளின் தரம் குறைந்ததுடன் இவற்றின் விலைகளும் உச்சத்துக்கு உயர்ந்தன.

தங்கத்தின்விலை உயர்ந்ததனால் நகைத்தொழிலாளருக்கு வேலைவாய்ப்புக்குறைந்தது ஒருபுறமிருக்க தங்க நகைகள் அணிபவர்களின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டது.

நாட்டில் திருட்டுக்களும் அதிகரிப்பதற்கும் தங்கத்தின்விலை உயர்வு பெரும் காரணமாக இருந்திருக்கிறதென்றே சொல்லவேண்டும்.

தங்கம் வெள்ளி, செம்பு போன்ற உலோகப் பொருள்களை இறக்குமதி செய்யாததன் காரணமாக கள்ளக் கடத்தல்களும் அதிகரித்தன. சுத்தமான வெள்ளியில் உருவாக்கப்பட்ட நாணயங்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது. செப்புத் தட்டுப்பாடு நாட்டில் தந்திக்கம்பித்திருட்டுக்கு வழிவகுத்தது.

ஆபரணங்கள் மற்றும் அழகிய சிற்பங்களையும் உருவாக்குவதில் பெரும் புகழ்பெற்ற கலைஞர்கள் நமது நாட்டில் இன்னமும் வாழ்கின்றனர்.

ஆனால் மூலப்பொருளான உலோகப் பொருள்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடும் விலைஉயர்வும் இந்தக் கலைஞர்களை வேலையற்றிருக்கச் செய்ததுடன் அவர்களது திறமையையும் மழுங்கச் செய்தது.

பாரம்பரியக் கலைகள் நாட்டில் அழிந்துபோகாமல் தடுப்பதற்கும் மூலப்பொருள்கள் கிடைக்காமையால் வாழ்க்கையைக் கொண்டுசெல்ல முடியாமல் கஷ்டப்படும் கலைஞர்கள் வாழ்வதற்கும் தங்கம், வெள்ளி, பித்தளை முதலிய உலோகப் பொருள்களை தாராளமாக இறக்குமதி செய்வது அவசியமாகும்.

இந்தவகையிலும் சிறுகைத்தொழில் திணைக்களம் இவற்றை இறக்குமதி செய்வதென்று மேற்கொண்டுள்ள தீர்மானத்தைப் பாராட்டவேண்டும்.

சில வாரங்களுக்கு முன் உச்சநிலையிலிருந்த தங்கம் இப்பொழுது இறங்கிவருகிறது. இந்திய அரசு தனது கையிருப்பிலுள்ள தங்கத்தை ஏலத்தில் விற்க முன்வந்ததும் பிரிட்டனிலும் தங்கத்தின்விலை குறைந்ததுமே இதற்குக் காரணமாகும்

இறக்குமதி செய்யும் தங்கம், வெள்ளி ஆகியவற்றை வெளிச்சந்தையில் அவை விற்கப்படும் விலைகளிலும் பார்க்க மிகக்குறைந்த விலையிலேயே சிறுகைத்தொழில் திணைக்களம் இவற்றை வழங்கவேண்டும்.

திருட்டு, கொலை, கள்ளக் கடத்தல் ஆகியவை ஒழிவதற்கும் கலைகளும் கலைஞர்களும் வாழ்வதற்கும் தங்கம், வெள்ளி முதலிய உலோகப் பொருள்களை இறக்குமதி செய்வதென்ற இறுகைத்தொழில் திணைக்களத்தின் தீர்மானத்தை நாட்டு மக்கள் மனமார வரவேற்பர் என்பது நிச்சயம்.

## மனித உரிமை விடுதலை முன்னணி

(வண்ணார்பண்ணை)

மனித உரிமை விடுதலை முன்னணி என்ற புதிய இயக்கமொன்று யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

யாழ். ஆனைப்பந்தி உயர் கலைக்கல்லூரியில் இந்த புதிய முன்னணி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது

இந்த இயக்கத்திற்குரிய அமைப்பு விதிகளும் கொள்கைப் பிரகடனங்களும் முன்னணியின் அமைப்பாளரால் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

சட்டத்தரணி திரு. ரி. ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் பின்வருவோர் இந்த முன்னணியின் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு யோ. பிரான்சிஸ் உபதலைவர் திரு. ரி ஸ்ரீஸ்கந்தராசா பொதுச்செயலாளர் திரு. கே. தம்பிமுத்து உபசெயலாளர்கள் திரு. எஸ். ஆர். இரத்தினசிங்கம் திரு வை. ரட்டாய்.

பிரதித்தலைவர்கள் திருவாளர்கள் ஜே. யோஷியா கே டானியல் மா. மகேஸ்வரன் எம். துரைராசா எஸ். நல்லையா.

தனாதிகாரி எஸ். செல்வரத்தினம் உபதனாதிகாரி வி. சின்னத்தம்பி.

பின்தங்கிய பகுதிகளில் வாழும் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் திட்டங்கள் கொண்ட 8 தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

## நியமனம்

(மட்டக்களப்பு)

இலங்கை தேசிய கிராமதான சங்கத்தின் மண்முனை மேற்கும் பிராந்திய சர்வோதய-கிராமோதய விஸ்தரிப்புச் சேவையாளராக வவுணதீவைச் சேர்ந்த திரு சரவணமுத்து இரத்தினசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். மேற்படி சங்கத்தின் கிழக்குப் பிரதேச பிரதம இணைப்பாளர் திரு. சுரேஷ் என் குமார் இந்நியமனத்தை வழங்கியுள்ளார்.

கிராம அபிவிருத்தித்துறையில் ஈடுபாடு கொண்ட திரு. இரத்தினசிங்கம், மண்முனைப் பிராந்திய கிராமமுன்னேற்றச் சங்கங்களின் சமாஜச்செயலாளராகவும், வவுணதீவுக்கிராம முன்னேற்றச் சங்கத்தின் நிருவாக சபை உறுப்பினராகவும் கன்னன்குடா-ஈச்சந்தீவு ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் இன்னும் பல சமூக அமைப்புகளிலும் பொறுப்பான பதவிகளிலிருந்து வருகிறார். (அ)

## ரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நவாலி தெற்கு சிந்தாமணிப் பிள்ளையார் கோவில் ரதோற்சவம் இன்று நடைபெறுகின்றது. நாளை தீர்த்தோற்சவத்துடன் உற்சவம் பூர்த்தியாகும். (இ)

## ஆசிரியருக்குக் கடிதம்:

# மன்னார் - சங்குப்பிட்டி பிரயாணச் சீர்கேடு

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்குக் குறுகிய நேரத்தில் செல்லும் வழிதான், சங்குப்பிட்டி-கேரதீவு வழியாகும். இப்பாதை வழியாக யாழ்., மன்னார் இ. போ. ச. சாலைகள் இணைந்து சேவைகளை நடாத்துகின்றன. கேரதீவுக்கும்-சங்குப்பிட்டிக்கும் இடையிலுள்ள கடற்பகுதியில் பாதைச் சேவையும், படகுச் சேவையும் நடைபெறுகின்றன. இச்சேவைகள் மிகவும் சீர்கேடான முறையில் நடைபெறுகின்றன.

கடந்த 13-4 78ல் மன்னாரிலிருந்து இந்த வழி மூலமாக வந்த பிரயாணிகள் கேரதீவில் மிகவும் கஷ்டம் அடைந்தார்கள். மன்னாரிலிருந்து காலை 5-00, 7-00, 9-30 மணிக்குப் புறப்பட்ட பஸ்களில் வந்த பயணிகளும், கிளிநொச்சி, வலைப்பாடு, வேரவில், கிராஞ்சிப் பகுதிகளிலிருந்து வந்த பயணிகளும் சுமார் எட்டு அல்லது ஒன்பது மணித்தியாலங்களாகக் கேரதீவில் யாழ்ப்பாணம் செல்வதற்கு பஸ் சேவை இல்லாமல் காத்திருந்தனர். கேரதீவிலும், சங்குப்பிட்டியிலும் ஒவ்வொரு சிறு கடைகளைத் தவிரப் பயணிகள் தேவைகட்கு வேறு வசதிகள் இல்லை. இந்நிலையில், அன்று பிற்பகல் 3-00 மணியளவில் தான் யாழ். பஸ் வந்தது. இதேபோன்ற ஒரு நிலை 19-4 78ல் இவ்வழியால் மன்னார் சென்ற பயணிகட்கு சங்குப்பிட்டியில் நடந்தது. அன்று காலை 5-00 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பஸ்ஸில், கேரதீவுக்கு வந்த பயணிகள் நெருக்குப்பட்டு வள்ளத்தில் ஏறியபடியால் வள்ளம் நீருள் மூழ்கிவிட்டது. பயணிகள் நீரில் குளித்த திருத்தமாடி எழுந்தார்கள் பலர் மீண்டும் யாழ் திரும்பினார்கள். அன்றைய தினம் இப்பாதையில் உள்ள மூழங்காவில் என்ற இடத்தில் இளைஞர்களைக் குடியேற்றும் வைபவம் நடந்தது. அதற்காக யாழ். கச்சேரி உத்தியோகத்தர்களும் வந்திருந்தனர். அவர்கள் தாம் கடனாகப் பெற்றிருந்த இயந்திர உதவியுடன் பாதையை இயக்கி, காணிக்கு வந்திருந்த இளைஞர்களை மட்டும் ஏற்றிச் சென்றனர். பின்னர் அவர்களை லொறியில் ஏற்றி மூழங்காவிலுக்குக் கூட்டிச் சென்றனர். இந்நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து மேலும் இரு பஸ்களில் வந்த பிரயாணிகளும் கேரதீவில் வந்துசேர்ந்தனர். வேறு படகுகளும் இல்லை பாதையிலும் போகமுடியவில்லை. இந்நிலையில், சற்று மனமிரங்கிய யாழ் கச்சேரி அதிகாரிகள், காத்துநின்ற பிரயாணிகளையும் பாதையில் ஏற்றிவந்து சங்குப்பிட்டியில் இணைத்துவிட்டார்கள். அங்கு நின்ற பிரயாணிகள் மன்னார் இ. போ. ச பஸ்ஸை நோக்கித் தவஞ்செய்ய ஆரம்பித்தோம். இறுதியாகப் பிற்பகல் 2-30 மணியளவில்தான் மன்னார் பஸ் வந்தது. அதில் பலர் மிதிபட்டும் நெரிபட்டும் ஏறினார்கள். இவ்வாறாகக் காலை 5-00 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து வெளிக்கிட்ட நாம் மாலை 7-00 மணிக்கு மன்னார் வந்தடைந்தோம்.

அடிக்கடி இவ்வழியில் இதே மாதிரியான நிலை ஏற்படுகின்றது. இதனை ஒரு தொடர் கதையாக நீடிக்கவிடாமல், நிரந்தரமாக நல்ல ஏற்பாடு களைச் செய்யத் தொடர்புடைய அதிகாரிகள் முன்வர வேண்டும்.

மன்னார் இ.போ.ச. சாலைக்குக் கணிசமான வருமானம் தரும் சேவை, சங்குப்பிட்டிச் சேவை. மேலும், தற்சமயம் தலைமன்னாரிலிருந்து கப்பல் மூலம் இந்தியா செல்வோர் தொகை அதிகரித்துவிட்டது. அவர்களும் இந்த பஸ் சேவையையே பயன்படுத்துகிறார்கள். ஆனால் போதிய பஸ் சேவை இல்லை. எனவே,

1. பிரயாணிகளின் அதிகரிப்பைக் கவனித்து, புதிய சேவையை நடாத்த மன்னார் யாழ். சாலைகள் முன்வரல் வேண்டும் தேவையானால் கப்பல் வரும் நாட்களில் தலைமன்னாரிலிருந்து - சங்குப்பிட்டி வரை மன்னார்ச் சாலை ஒரு விசேட சேவையை நடாத்தலாம்.

2. போதிய வள்ளங்களை படகுகளைச் சேவையில் ஈடுபடுத்தவேண்டும்.

3. கேரதீவிலும்-சங்குப்பிட்டியிலும் பயணிகள் வரிசையாக நின்று பஸ்களிலும், படகுகளிலும் ஏறுவதற்கு நல்ல ஒழுங்கு செய்தல்வேண்டும்.

4. கேரதீவில் அல்லது சங்குப்பிட்டியில் தற்காலிகத் தொலைபேசி வசதியாவது செய்துதரப்பட்டால் அந்தந்த இ. போ. ச. சாலைகளுடன் தொடர்புகொண்டு பஸ் சேவை பற்றி அறிய உதவியாக இருக்கும்.

அத்துடன் கேரதீவையும் சங்குப்பிட்டியையும் இணைக்கும் மகாதேவாப் பாலத்தைக் கட்டிமுடிக்கத் தமிழ் எம்.பி.க்கள் கூட்டு முயற்சிகளை மேற்கொள்வது வரவேற்கத்தக்கது. இப்பாலத்தைக்கட்டக் கடந்த சில வருடங்களாக வரவு-செலவுத் திட்டத்தில் 10 ரூபா, அடையாள மானியமாக ஒதுக்கப்பட்டிருந்தது இதைவிட வேறு உருப்படியான வேலை எதுவும் நடக்கவில்லை. மன்னார், கிளிநொச்சி, சாவகச்சேரி எம். பிக்கள் தத்தமது தொகுதிகளுக்காக ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து ஒரு பகுதியை மகாதேவாப் பாலம் அமைக்கக் கொடுத்துதவலாம். இந்தியப் போக்குவரவு அதிகரித்திருப்பதாலும், திருக்கேதீஸ்வரம், மடுமாதா ஆலய திருக்கோயில்கட்குச் செல்லும் பக்தர்கள் அதிகரித்திருப்பதாலும், மூழங்காவில் போன்ற குடியேற்றத் திட்டங்கள் தொடங்கப்பட்டிருப்பதாலும் மகாதேவாப் பாலம் மிகவும் முக்கியமானதாகும்

எனவே இவ்விடயத்துடன் தொடர்புடைய எம். பிக்களும், யாழ், மன்னார் அரச அதிபர்களும் இப்பிரச்னையை நல்ல முறையில் தீர்த்துவைப்பார்களெனப் பயணிகள் எதிர்பார்க்கின்றனர். தமிழ் எம். பி.க்கள் மனம் வைத்தால் சிறிதுசிறிதாக ஐந்து அல்லது ஆறு வருடத்தில் மகாதேவாப் பாலத்தைக் கட்டிவிடலாம்.

வி. அருட்குமார்
மன்னார்.

### மணிவாக்கு

நாக்கு மூன்று அங்குல நீளம்தான் உள்ளது. ஆனால் அது ஆறு அடி உயர மனிதனையும் கொன்றுவிடும்.

—ஒரு ஜப்பானியப்பழமொழி

# "மனித உரிமை அனைவருக்கும் உண்டு"

(உடுப்பிட்டி)

"பல மத, பல இன, பல மொழிகள் கொண்ட தேசத்தில் நாட்டின் ஒருமைப்பாட்டை நிலை நாட்ட வேண்டும்" என்று இலங்கைக் கத்தோலிக்க மேற்றிராணிமார்களும், துறவறச் சபைத் தலைவர்களும் அண்மையில் தேசிய ஒற்றுமைபற்றி நடத்திய மகாநாட்டில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை ஆயர்கள் பேரவைத் தலைவர் ஆயர் பேரருட் திரு அன்ரனி சேரமுப், இலங்கை துறவறசபைகளின் பேரவைத் தலைவர் வண பிதா.டி குறியாகோசும் கூட்டாகக் கையொப்பம் இட்டு வெளியிட்ட பிரஸ்தாப அறிக்கையின் பிரதிகள் அரசாங்கத்திற்கும் நாட்டின் அரசியல் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவ்வறிக்கையில் "இந் நாட்டு மக்கள் அனைவரும் சகோதரராதலால் அவர்கள் இன்த்தால் வேறுபட்டவராயினும் எல்லோரும் சமமே ஒவ்வொருவரினதும் சமயம், மொழி, கலாச்சாரம் ஆகியவை மதிக்கப்பட வேண்டும். நாட்டின் ஒருமைப்பாடு நாட்டிற்கும், மக்களுக்கும் நன்மை பயக்கத்தக்கது ஆகையால் அதைப்பேண எல்லாவித முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சிறப்பாகச் சிறுபான்மை இனத்தவருக்கு உள்ள குறைகளைப் போக்குவதற்கு அரசு ஆவன செய்யவேண்டும்.

"எல்லாமக்களும் மனிதர்களாக நடத்தப்படுவதற்கு உரிமை உடையவர்கள், தங்களைப் பிறர் எவ்வாறு பேண வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அவ்வாறே அவர்களும் பேணப்படவேண்டும். தீமையை நன்மையால் வெல்லலாமே தவிர தீமையால் நன்மையை வெல்ல முடியாது நாட்டின் ஒருமைப்பாடு நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மை பயக்கத்தக்கது.

தமிழர்களின் அடிப்படை உரிமைகள் சில அவர்களுக்கு மறுக்கப்பட்டு, அவர்களுக்கு வேற்றுமை காட்டுவதை நீக்க முடியாதென்று அவர்கள் கருதுவதால்தான் நாம் அவர்களது தனிநாட்டுக் கோரிக்கையை விளங்கத்தக்கதாக உள்ளது. ஒரு தேசம் என்ற ஒருமைப்பாட்டின்கீழ் பல இனமக்கள் இணைந்து வாழ்வது விரும்பத்தக்கதும் சாத்தியமானதுமாகும்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மொழிவளர்ச்சிக்கு இலக்கிய ஆராய்ச்சிகள் பயன்தரும்

## — கல்வி அமைச்சர்

(வெள்ளவத்தை)

இன்பத்தமிழ் எங்கள் மொழி. இஸ்லாம் எங்கள் வழி. அதனால் அடுத்த வருடம் மே மாதத்தில் நான்காவது அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாடு இலங்கையில் நடைபெறும்.

இவ்வாறு தமிழ்நாடு காயல் பட்டினத்தில் நடைபெற்ற மூன்றாவது இஸ்லாமிய தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பிரதிநிதிகளாகவும், பார்வையாளராகவும் கலந்துகொண்டவர்கள் பங்குபற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் கலாநிதி எம். உவைஸ் கூறினர்.

நான்காவது இஸ்லாமிய தமிழ் ஆராய்ச்சி மாநாடுபற்றிய இவ்வாலோசனைக் கூட்டம் ஓட்டல் தப்ரபேனில் நடைபெற்றது.

ஆலோசனைக் கூட்டத்தில் விசேட அழைப்பாளராகக் கலந்துகொண்ட கல்வி அமைச்சர் திரு நிஸங்கா விஜயவர்த்தன பேசுகையில் கூறியதாவது:-

இஸ்லாமிய மக்கள் தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்டவர்கள். தமிழ் மொழியை அவர்கள் சிறப்பாகப் பேசுகிறார்கள். ஆனால் அதனை பெரும்பான்மையான சிங்கள மக்கள் பேசவேண்டாம் என்று என்றுமே தடை போட்டது கிடையாது.

இங்கு நடைபெறவிருக்கும் நான்காவது இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டிற்கு அரசு போதிய ஒத்துழைப்பு நல்கும். மொழியின் வளர்ச்சிக்கு இலக்கிய ஆராய்ச்சிகள் நன்மைபயக்கும்.

நான்காவது இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டிற்கு போஷகர்களாக பின்வரும் அமைச்சர்கள் தெரிவு செய்யப்பட்டனர். கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயவர்த்தன, வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீது, நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம், போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகமட்.

மாநாட்டுச்குழு நிர்வாகிகளாக தலைவர் கலாநிதி எம். உவைஸ், துணைத்தலைவர் ஜனாப் சஹாப்தீன் ஜே. பி. செயலாளர் அல்ஹாஜ் இஸட். எம். மசூர்மௌலானா, பொருளாளர் பல்லாக்கு லெப்பை சதக் ஹாஜியார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# இவர்களுக்கு விதைகிழங்கு கிடைக்கும்

[சங்கானை]

அரசாங்கத்தின் திட்டத்திற்கமைய விவசாயிகள் தாம் பெற்றுள்ள விவசாய அடையாள அட்டையை புதுப்பிப்பதுடன் தமது காணியின் விஸ்தீரணத்தின் (ஏக்கர்) வரியையும் முன்கூட்டிச் செலுத்தியவர்களுக்கு மட்டும் விதை உருளைக் கிழங்கு எதிர்வரும் காலபோகத்திற்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய விவசாய அடையாள அட்டை பெறுவோர் அவ்வப்பகுதி பயிர்ச்செய்கை உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும். தொல்புரம் விவசாயப் பெருக்கக் குழு எல்லைக்குள் இருப்போர் மேமாதம் 15ம் திகதிக்கு முன்பதாக தமக்கு நடுகைக்குத் தேவையான விதை உருளைக் கிழங்கிற்கு விண்ணப்பிக்க வேண்டும் எனவும் வெளிநாட்டிலிருந்து வரவழைக்கும் ஊர்மண்வெட்டிகளும் விவசாய அட்டை புதுப்பித்தோர்களுக்கே வழங்கப்படவுள்ளதாக சங்கானை கிழக்குப்பகுதிபயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. எஸ். எம். கதிரவேலு தெரிவித்துள்ளார். [உ]

# மிளகாய்க்கு உத்தரவாத விலைநிர்ணயிக்க வேண்டும்

## பேரவையில் நவம் கோரிக்கை

[கொழும்பு]

செத்தல்மிளகாய்க்கு உத்தரவாத விலை ஒன்றை நிர்ணயிக்கும்படி சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தேசிய அரசுப் பேரவையில் கோரிக்கைவிடுத்தார்.

ஒரு றாத்தல் மிளகாயை உற்பத்திசெய்ய 9 ரூபாவரை செலவாகிறது எனவே அதன் உத்தரவாத விலையை 10 ரூபாவுக்கு குறையாமல் நிர்ணயிக்க வேண்டும் என்று திரு. நவரத்தினம் கோரினர்.

மிளகாய்க்கு உத்தரவாத விலை நிர்ணயிக்கப்படாத நிலையில் என து தொகுதியில் ஆயிரக்கணக்கானேர் மிளகாய் உற்பத்தியைக் கைவிட்டுவிட்டனர் இதே வேளை நீங்கள் ஆயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு அளிக்க முன்வந்திருப்பதில் அர்த்தமில்லை. என்றும் திரு. நவரத்தினம் கூறினர்.

### அப்துல் மஜீத் பதில்

திரு. நவரத்தினத்தின் கேள்விக்குப் பிரதி உணவு விவசாய அமைச்சர் ஜனாப் அப்துல் மஜீத் பதில் அளிக்கையில் கூறியதாவது:

மிளகாய், வெங்காயம் ஆகிய சில உப உணவுப் பொருட்களுக்கு உத்தரவாத விலையை நிர்ணயிக்கவே அரசு தீர்மானித்துள்ளது. விரைவில் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

பிரதிவர்த்தக அமைச்சர் திரு எம். எஸ். அமரசிறி தலைமையில்வாழ்க்கைச்செலவு ஆராய நியமிக்கப்பட்ட குழு மிளகாயின் விலையை 9 ரூபாவுக்கு மேல் அதிகரிக்கக்கூடாது என்று சிபார்சு செய்துள்ளது.

மழையை நம்பி மிளகாய் செய்கை பண்ணுபவர்களுக்கு ஒரு றாத்தல் மிளகாய்க்கு 3 ரூபாவும், நீர்ப்பாசனத்தை நம்பி விவசாயம் செய்பவர்களுக்கு 4 ரூபாவும் செலவாகிறது.

அப்போது குறுக்கிட்ட திரு. நவரத்தினம் ''எங்கே அப்படிச் செலவாகிறது'' என்று கேட்டார்.

ஜனாப் மஜீத் தொடர்ந்து பேசுகையில், எவ்வாறாயினும் ஒரு றாத்தல் மிளகாய்க்கு 12 ரூபாவரைஉத்தரவாதவிலை நிர்ணயிக்கமுடியாது என்றார். [ம-இ]

இனக்கலவரத்தில்

# சேமடைந்த கடைகளுக்கு விசாரணையின்பின் நஷ்டஈடு

## வவுனியா சிவாவின் கேள்விக்கு லலித் பதில்

[கொழும்பு]

ஆகஸ்ட் கலவரத்தின்போது பாதிப்புற்று, காப்புறுதி செய்யப்பட்ட வர்த்தக நிறுவனங்களுக்கு விசாரணை முடிந்தபின்னரே நஷ்டஈடு வழங்கப்படுமென நேற்று முன் தினம் தேசிய அரசுப் பேரவையில் வர்த்தக அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

தீ, களவு, உள்நாட்டுக்குழப்பம் ஆகியவற்றுக்கு எதிராக காப்புறுதி செய்யப்பட்ட எத்தனை வர்த்தக ஸ்தாபனங்கள் நஷ்டஈடு பெற்றன என்று பேரவையில் வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் கேட்டபோதே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

அமைச்சர் தமது பதிலில் மேலும் தெரிவிக்கையில் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு 50,000 ரூபாவுக்குமேல் நஷ்டமடைந்ததாக இதுவரை 83 ஸ்தாபனங்கள் விண்ணப்பித்துள்ளன. இவற்றுள் 2 களவு காப்புறுதிப் பத்திரங்களின் கீழும், 81 தீ காப்புறுதிப்பத்திரங்களின் கீழும் விண்ணப்பித்திருந்தன என்று கூறினர். [மா இ]

# அண்ணனின்கையை தம்பி வாளால் வெட்டினராம்

(காரைநகர்)

இரு சகோதரர்களிடையே எழுந்ததாகக் கூறப்படும் குடும்பத்தகராறு காரணமாக அண்ணனின் கையை தம்பி வாளால் வெட்டி துண்டித்த சம்பவம் ஒன்று வட்டுக்கோட்டையில் நடந்துள்ளது.

இதுபற்றி அறிய வருவதாவது,

திடீர் வாக்குவாதத்தை அடுத்து தம்பியான அருணன் சிவசம்பு என்பவர் தனது அண்ணனான அருணன் நடராசாவை வாள்கொண்டு வெட்ட முற்பட்டபோது அவரின் கை துண்டிக்கப்பட்டதாம்.

நடராசா தற்போது கை துண்டிக்கப்பட்ட நிலையில் யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் தம்பி தலைமறைவாகியுள்ளார். சங்கானைப் பொலிசார் சந்தேகநபரைத் தேடித் திரிகின்றனர். (இ)

# இன்று

[யாழ்ப்பாணம்]

படித்த இளம் வாலிபர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கும் திட்டத்தின்கீழ் இ. போ. ச. ஜேர்மன் பயிற்சி நிலையம் புதிய பயிற்சியாளர்களைத் தெரிவுசெய்யவுள்ளது. இதற்கான நேர்முகப் பரீட்சை இன்று மொறட்டுவவில் நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சிக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்காக கடந்த பெப்ரவரிமாதம் எழுத்துப் பரீட்சை ஒன்றும் நடைபெற்றது. எழுத்தும் பரீட்சையில் குறிப்பிட்டளவு புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது. [நெல். திரு. —இ]

# தலைநகரில் மே தினம்

[வெள்ளவத்தை நிருபர்]

மே முதலாம் திகதி— மே தினமாகப் பிறக்கின்றது.

உலகத் தொழிலாளர்கள் உற்சாகமாக இத்தினத்தை நினைவுகூர்கின்றனர்.

நம் நாட்டில் தொழிற்சங்கத்தை உருவாக்கியவரும் தொழிற்சங்க முன்னோடியும் மேதினத்தை முதன் முதலில் கொண்டாடியவருமான தொழிற்சங்கப்பிதா மகன் எ. ஈ குணசிங்காவுக்குத் தலைநகரில் சிலை வைக்கப்படுகிறது—காலை 9 மணிக்கு ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன தலைநகரில் வைக்கப்பட்டுள்ள அமரர் ஏ. ஈ. குணசிங்காவின் சிலையைத் திறந்து வைக்கிறார். குணசிங்காவின் சிலை கல்லுடைக்கும் உருவில் காணப்படுகிறது.

அமரர் ஏ. ஈ. குணசிங்காவின் சிலைக்குப் பிரதமர் ஆர். பிரேமதாஸ மலர்மாலை அணிவித்தார். அவரது தொகுதியில் சிலை நிறுவப்பட்டுள்ளதால், பிரதமரின் ஆதரவாளர்கள் கைதட்டி உற்சாகப்படுத்தினர்கள்.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன பேசும்பொழுது: ''புதிய பாடல்களைக் கேட்க வேண்டுமானால் ஐக்கிய தேசியக்கட்சியின் மேதின கலாசார விழாவுக்கு வாருங்கள்; பழைய பாடல்களைக் கேட்கவேண்டுமென்றால் எதிர்க்கட்சி மேதினங்களுக்கு போங்கள்'' என்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மேதின கலாசார விழாவில் மாலையில் புதிய பாடல்களை கேட்கவேண்டும் என்றார். கூட்டம் கலைகிறது.

0 0 0

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மேதினக் கூட்டம் புதிய நகர சபை மண்டபத்தில் ஆரம்பமாகிறது. மண்டபம் நீலவர்ணமாக காட்சியளிக்கிறது.

ஊர்வலத்தை முன்னாள் பிரதமரின் மைத்தனும், நுவரெலியா-மஸ்கெலியா 2வது எம். பி யுமான திரு. அனுரா பண்டாரநாயக்கா தலைமைதாங்கி வழிநடத்துகிறார். அவருடன் முன்னாள் அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவும் காணப்படுகிறார்.

மக்கள் சுலோக அட்டைகளையும், கட்சி கொடிகளையும் பெனர்களையும் பிடித்தவாறு கோஷமிடுகின்றனர்.

'எங்கள் அம்மா ஸ்ரீமா வாழ்க'

'எட்டு றாத்தல் தானியம் எங்கே'

'83ல் மீண்டும் அம்மா'

'இலவச அரிசி மீண்டும் தருவார்'

'அமரர் வழி அம்மை வழி அம்மைவழி எங்கள் வழி'

இப்படிக் கோஷமிட்டவாறு ஆடிப்பாடிக் கொண்டும் அரசாங்கத்திற்கு எதிரான சுலோகத்தை கூறியவாறும் ஹவ்லக் பூங்காவை நோக்கிப் போகின்றனர்.

0 0 0

இடதுசாரி ஐக்கிய முன்னணியின் ஊர்வலம் காம்பல் பூங்காவில் ஆரம்பமாகிறது. எங்கும் சிவப்புமயமாகக் காட்சிஅளிக்கிறது.

## ஒரு பார்வை

சமசமாஜ கம்யூனிஸ்ட் கட்சிகள் கூட்டாக ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தன இடதுசாரி ஐக்கிய முன்னணித்தலைவர்களான திரு. கொல்வின் ஆர். டி. சில்வா பீட்டர்கெனமன் டி. பி. சுபசிங்கா திரு. பெர்னாட் சொய்சா ஆகியோர் ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கி வழி நடத்துகின்றனர்.

''தொழிலாளர் நலனுக்கு ஊறு விளைவிக்கும் அறிக்கைகளை பாயல் வாக்கு மாணவர் ஆசிரியர்களைப்பழிவாங்காதே குண்டர்கள் சக்தி தோற்கடிப்போம் எட்டு றாத்தல் எங்கே போன்ற கோஷங்கள் ஊர்வலத்தில் ஒலித்தன. உலகத் தொழிலாளர்களே ஒன்று படும் என்ற வாசகம் தமிழ் சிங்களம் இரண்டிலும் பொறிக்கப்பட்டிருந்தது.

பெரிய அளவிலான சுத்தியலும் அரிவாளும் கட்டப்பட்டிருந்த ஒருவாகனமும் ஊர்வலத்தில் சென்றது.

லெனின், மார்க்ஸ் ஏங்கல்ஸ் டிரொஸ்கி போன்ற தலைவர்களின் படங்களைத் தூக்கிச் சென்றனர், பாண்ட் வாத்தியத்துடன் ஊர்வலம் ஹைட்பார்க் திடலை அடைந்தது.

0 0 0

ஜனதா விமுக்தி பெரமுனை

(8-ம் பக்கம் பார்க்க)

# இந்திய மக்களே எமது ஆரம்பகால வழிகாட்டிகள்

## கல்விமந்திரி கருத்து

[வெள்ளவத்தை]

''இலங்கையர்களாகிய நாம் வரலாற்றுக் காலந்தொட்டு அண்டை நாடான இந்தியாவோடு நெருக்கமான உறவு கொண்டுவருகிறோம். கலை கலாச்சார பண்பாட்டில் இரு நாடுகளிடையே பாரம்பரிய நெருக்கம் இருந்துவருகின்றது. ஆரம்பகாலங்களில் எமக்கு வழிகாட்டிகளாக இந்தியர்களே இருந்துவந்துள்ளனர்''

இவ்வாறு இந்தியப் புத்தகக் கண்காட்சியைத் [illegible] திறந்து வைத்து உரையாற்றிய கல்வி அமைச்சர் திரு நிஸங்கவிஜயரத்ன குறிப்பிட்டார்.

ஹோ[illegible] சமுத்திராவில் நடைபெற்ற புத்தகக்கண்காட்சியை இந்திய தூதுவர் தொடக்கி வைத்தார்.

கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன பேசுகையில் மேலும் கூறியதாவது:

பொதுமக்களின் கருத்து வளர்ச்சிக்கு புத்தகங்களே வழிகாட்டுகின்றன. அறிவு, ஆன்மீக புத்தகங்களின் ஒரு நல்ல சமுதாயத்தைக்கட்டி எழுப்பலாம். இப்பொழுது இலங்கை புத்தக வெளியீட்டுத்துறையில் முன்னேறி வருவதை இப்போது காணக்கூடியதாக இருக்கிறது.

கடந்தகால வரலாற்றுக்களை நிகழ்கால மக்களுக்கு எடுத்துச் சொல்வது நூல்களே. புத்தகங்கள் அதிகமாக வெளிவருவது அவசியமாகும்.

இந்தியத் தூதுவர் திரு. குர்பான்சிங் பேசுகையில் கூறியதாவது:

''மக்களின் அறிவையும் ஆற்றலையும் வளர்க்க புத்தகங்களே முன்னிற்கின்றன. இந்தியாவில் 5000 புத்தக வெளியீட்டாளர்கள் இருக்கிறார்கள். 16000 தலைப்புகளில் பலவிதமான புத்தகங்கள் வெளிவருகின்றன.

இந்தியப் புத்தக ஏற்றுமதியில் மாத்திரம் கடந்த ஆண்டு ஒருகோடி நாற்பது லட்சம் ரூபா லாபமாகக் கிடைத்தது. இந்தியாவில் வெளியிடப்படும் ஆன்மீக புத்தகங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருக்கின்றன'' என்றார். [இ]

மட்டக்களப்பு

# பின்தங்கிய பகுதி அபிவிருத்தியில் சர்வோதய சிரமதானசங்கம்

(மட்டக்களப்பு)

இலங்கை சர்வோதய சிரமதான சங்கம் மட்டக்களப்புத் தொகுதியின் பின்தங்கிய பகுதிகளான கன்னன்குடா, ஈச்சந்தீவு ஆகிய பகுதிகளில் அதன் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. முதற்கட்ட நடவடிக்கையாக இப்பகுதிகளிலுள்ள இலவச பாலர் பாடசாலைகளுக்கும் நோயாளர்கள், கர்ப்பிணிகள், உபகாரச் சம்பளம் பெறுவோர்களுக்கும் இலவசமாக தகரப்பால் விநியோகிக்கப்பட்டுள்ளது.

மேலும் உன்னிச்சைக்குளக் குடியேற்றப் பகுதிகளான இருநூறுவில், பாவற்கொடிச்சேனை மற்றும் தாண்டியடி ஆகிய இடங்களிலும் முக்கியமான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கிழக்குப் பிரதேச சர்வோதய சிரமதான சங்கத்தின் பிரதம இணைப்பதிகாரி திரு சுரேஷ், எஸ். குமார் மண்முனை மேற்குப் பிரதேச கிராமோதய விஸ்தரிப்பு அலுவலர் திரு ச. இரத்தினசிங்கம் ஆகியோர் ஈடுபட்டுவருகிறார்கள்.

பின்தங்கிய பகுதிகளிலும் குடியேற்றப் பகுதிகளிலும் கல்வி மற்றும் விவசாய அபிவிருத்திக்கு வேண்டிய வேலைத் திட்டங்களும் சிரமதான அடிப்படையில் நடாத்தப்படவுள்ளன. அதற்கான கிராமங்கள் தெரிவு நடைபெற்றுவருகிறது.

மேற்படி வேலைத் திட்டங்களை ஆரம்பிக்கும் இடங்களில் கிராம சுயராஜ்யம், சர்வோதய அடிப்படைக் கொள்கை பற்றிய கலந்துரையாடல்களும், சர்வோதயக் குழுக்களை அமைத்தலும் முக்கியமாக இடம் பெறும். (அ)

## கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்

(சங்கானை)

"இலங்கை வட பிராந்திய கூட்டுறவு ஊழியர் சம்மேளனம்" என இதுவரை காலமும் இயங்கிவந்த தொழிற்சங்கம் சென்றஆண்டு டிசம்பர் மாதம் பொதுச் சபையினால் தீர்மானிக்கப்பட்டதற்கமைய கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கமெனத் தொழிற்சங்கங்களைப் பதிவுசெய்யும் பதிவாளரால் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இதனை கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத் தலைவர் திரு, எஸ். கே. திருச்சிற்றம்பலம் சகல கிளைத்தலைவர், செயலாளர்களுக்குமசுற்றுநிருபம் ஒன்றின்மூலம் தெரிவித்துள்ளார்' (உ)

## கடற்றொழில் பயிற்சிக்கு 13-ம் திகதி எழுத்துமூலப் பரீட்சை

(உடுப்பிட்டி)

மட்டக்குளி இலங்கை கடற்றொழில் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சியாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான எழுத்து மூலப்பரீட்சை எதிர்வரும் 13ம் திகதி பிரண்தாபப்பயிற்சி நிறுவனத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சித் திட்டத்தில் அனுமதிக்கப்படும் பயிலுநர்கள் மீன்பிடித்தல், மீன்பிடி இழுவைக்கப்பல் செலுத்துதல் போன்ற பயிற்சிகளில் 2 வருடம் ஈடுபடுத்தப்படுவர். இவர்களுக்குப் பயிற்சி நாட்களில் மட்டும் உணவுப்படியாக நாளொன்றுக்கு 8 ரூபா வழங்கப்படும்.

இப்பயிற்சியில் சேரவிரும்பி விண்ணப்பித்த சகல விண்ணப்பதாரிகளுக்கும் எழுத்துமூலமான பரீட்சை சம்பந்தமான அழைப்புக் கடிதங்கள் கடந்தவாரம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

## ஜி. சி. ஈ. உயர்வகுப்பு அனுமதி

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் ஜி. சி. ஈ. உயர் வகுப்பில் அனுமதிபெறும் மாணவர்கள் சகலரும் இம்மாதம் 15ம் திகதிக்கு முன்னர் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டுவிடுவர் என்றுவடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இது தொடர்பானமகாநாடு ஒன்று இம்மாதம் 9ம் திகதி யாழ். கல்வித் திணைக்களத்தில் திரு தி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறும்.

இம்மகாநாட்டில் ஜி. சி. ஈ. உயர்வகுப்பு மாணவர்களின் அனுமதி பற்று விரிவாக ஆராயப்படும். (இ)

## காரைநகர் கிழக்கு கூட்டணிக்கிளை

(காரைநகர்)

காரைநகர் கிழக்கு தமிழர் விடுதலைக்கூட்டணிக் கிளையின் பொதுக்கூட்டம் இத்தன் வேணியிலுள்ள கூட்டணிகிளை அலுவலகத்தில் எம். பி. திரு. கா. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் மு. பாலலிங்கம், உபதலைவர் கி. கனகசுந்தரம், காரியதரிசி க. அமிர்தலிங்கம், உபகாரியதரிசி க. குமரகுரு, தனாதிகாரி க. தம்பையா பத்து செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க)

சங்கீதம்-ஜி.சி.ஈ. பரீட்சைகள்

## டிசம்பரில் நடைபெறுவதால் மாணவருக்கு சிரமம்

### பெற்றோர் புகார்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபை சங்கீதப் பரீட்சைகள் இம்முறை டிசம்பர் மாதம் நடைபெற உள்ளதால் டிசம்பரில் ஜி.சி.ஈ. பரீட்சை எடுக்கும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவர் என்று பெற்றோரும் மாணவரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

சங்கீதப்பரீட்சைகளை ஆகஸ்ட் மாதத்தில் நடத்துவதென ஏற்கனவே தீர்மானிக்கப் பட்டிருந்த போதிலும் ஆகஸ்டில் ஜி. சி. ஈ. பரீட்சை நடைபெற இருப்பதால் சங்கீதப் பரீட்சைகள் டிசம்பர் மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டன.

டிசம்பர் மாதத்திலேயே இரு பரீட்சைகளும் நடைபெற இருப்பதால் இரண்டு பரீட்சைகளுக்குமே தம்மைத் தயார் படுத்திக் கொள்வது பெரும் சிரமமாக இருக்கும் என பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

### கல்விப் பணிப்பாளர் விளக்கம்

ஆகஸ்டில் பாடசாலை விடுமுறை நாட்கள் மிகவும் குறைவாக இருப்பதனால் மாணவர்களுக்கு ஜி.சி.ஈ. பரீட்சையுடன்சங்கீதப் பரீட்சைகளிலும் தோற்றுவது சிரமமாக இருக்கும் என்ற காரணத்தினாலேயே சங்கீதப்பரீட்சைகள் டிசம்பர் மாதத்திற்கு ஒத்திபோடப்பட்டது அதே போன்று டிசம்பரிலும் ஜி. சி. ஈ பரீட்சையில் மாணவர்களை எதுவிதத்திலும் பாதிக்காத வகையில் சங்கீதம் பரீட்சைகள் நடைபெறும்என்று வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் தமது நிருபரிடம் தெரிவித்தார். (இ)

## சுதேசிய திருநாள் வைரவிழா

(அரியாலை)

அரியாலை மக்களால் கடந்த 59 ஆண்டுகளாக மிகவும் சிறந்த முறையில் கொண்டாடப்பட்டுவரும் சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை அடுத்த ஆண்டு வைரவிழாவாகக் கொண்டாடவேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த வைரவிழாவையொட்டி அகில இலங்கை ரீதியில் கலை, கலாச்சார, நாடக, விளையாட்டுப்போட்டிகளை அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் நடாத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இக்குழுவின் தலைவராக பதில் நில அளவை பதிவாளர் நாயகம் திரு. தா. சோமசுந்தரமும், சமூகசேவை இளைஞர் பிரதம எழுதுவினைஞர் திரு. செ. நடராசா செயலாளராகவும், யாழ். ஐக்கியவியாபாரச் சங்க கணக்காளர் திரு. செ. அருளம்பலம் பொருளாளராகவும், 22 பேர் கொண்ட நிர்வாகசபையும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டது. (இ)

## நிர்வாகிகள்

(வேலணை)

புங்குடுதீவு இல்லாலைப்பிட்டி சனசமூகநிலையத்தின் 18-வது வருடாந்தப் பொதுக் கூட்டமும் 10-வது ஆண்டுநிறைவு விழாவும் முறையே நிலைய மண்டபத்திலும் விளையாட்டுத் திடலிலும் நடத்தப்பட்டன. சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தற்காலிகத்தலைவர் திரு. நா. குணரத்தினம் தலைமையில் நடைபெற்ற போது பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. க. இராசரெத்தினம் உபதலைவர் திரு. நா. மகாலிங்கம் இணைச் செயலாளர்கள் திருவாளர்கள் கா. குணலிங்கம், சி. பரமேஸ்வரன் தனாதிகாரி செ. சிறீஸ்வரன் விளையாட்டுத்துறை பெ. தங்கவேலு, ஏ. இலிங்கம் மற்றும் 5 பேர்கள் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (உ)


## விவசாயிகளுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

# "அம்புஷ் 25"

கிருமிநாசினி மூலம் வெங்காயத்தில் பச்சைப்புழுத் தாக்கத்தை கட்டுப்படுத்தல்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வெங்காயத்தில் பச்சைப்புழுத்தாக்கம் (SPODOPTERA) மிகவும் மோசமாக உள்ளது. அதற்குத் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் உடனே எடுக்காவிடில் உங்களது முழுப்பயிரும் நாசமாகிவிடும்.

வெங்காயம் முளைத்த நாளில் இருந்து "அம்புஷ் 25" விசிறுங்கள். தொடர்ந்து 30 நாட்களுக்கு 5 நாட்கள் இடைவெளியில் விசிறுதல் வேண்டும். 30 நாட்களின் பின்னர் 14 நாட்கள் இடைவெளியில் விசிறல் வேண்டும்.

அம்புஷ் 25 பச்சை புழு முட்டைகளை அறவே அழிக்க வல்லது. ஆகவே நீங்கள் தாமதியாது அம்புஷ் 25தை விசிறுங்கள். ஒரு அவுன்ஸ் அம்புஷ் 25 மருந்தை 10 கலன் நீரில் கலந்து பாவிக்கவும். **இக்கலவையுடன் ஏதாவது ஒரு ஒட்டும் தன்மையுடைய மருந்தினையும் கலந்து விசிறவும்.** ஒரு கலன் கலவையுடன் ஒரு அவுன்ஸ் ஒட்டும் மருந்தினைக் கலக்கவும்.

"அம்புஷ் 25" மருந்தினை மாத்திரமே பாவியுங்கள். வேறு எவ்வித கிருமிநாசினிகளுடனும் கலக்க வேண்டாம். அம்புஷ் 25தை அதிகாலையிலோ அல்லது மாலையிலோ விசிறவும்.

மேலதிக விபரங்கட்கு தொடர்பு கொள்ளுங்கள் :

CIC

கெமிக்கல் இண்டஸ்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்,
த. பெ. இலக்கம் 352,
கொழும்பு - 1.

# நியூட்ரன்குண்டு உற்பத்திக்கு சர்வதேச ரீதியில் தடை

## பிரெஷ்னேவ் கோரிக்கை

பொன், மே. 5

நியூட்ரன் குண்டு உற்பத்தியை சர்வதேசரீதியில்கட்டுப்படுத்தவேண்டும்.

இவ்வாறு சோவியத் ஜனாதிபதி திரு. பிரெஷ்னேவ்மேற்கு ஜெர்மன் தலைநகரான பொன்னில் தெரிவித்துள்ளார்.

மேற்குஜெர்மன் தலைவரினால் தமக்கு அளிக்கப்பட்ட இராப்போசன விருந்தில் உரையாற்றுகையிலேயே திரு. பிரெஷ்னேவ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'நியூட்ரன்' குண்டு உற்பத்தியை அமெரிக்கா நிறுத்துமானால் சோவியத்யூனியனும் இக்குண்டு உற்பத்தியை தொடர்ந்து மேற்கொள்ளாதென்றும் திரு. பிரெஷ்னேவ் தெரிவித்துள்ளார். (இ)

## மேற்கு ஜெர்மனியில் சோவியத் அதிபர்

பொன், மே. 5

சோவியத்ஜனாதிபதி பிரெஷ்னேவ் மேற்கு ஜெர்மனிக்கு ராஜாங்க முறையில் விஜயமொன்றை முதல்தடவையாக மேற்கொண்டு நேற்று பொன் வந்து சேர்ந்தார்.

மேற்கு ஜெர்மன் பிரதமர் ஸ்மித் அவரை விமானநிலையத்தில் வரவேற்றார்.

திரு. பிரெஷ்னேவ் கிழக்கு-மேற்கு ஜெர்மனிகளின் உறவுகள் பற்றியும் ஆயுதக்கட்டுப்பாடு பற்றியும் மேற்குஜெர்மன் தலைவர்களுடன் பேச்சு நடத்துவார்.


திரு. பிரெஷ்னேவின் வருகையை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன.

பிரெஷ்னேவைப் பாதுகாக்க மேற்கு ஜெர்மன் அரசு 500 பாதுகாவலர்களை நியமித்துள்ளது. (இ)

## அரசியல் மகாநாடு

புதுடில்லி, மே. 5

இந்திய காங்கிரஸ் கட்சியின் அரசியல் மகாநாடு இம்மாதம் 15ம், 16ம் திகதிகளில் புதுடில்லியில் நடைபெறவுள்ளது. (இ)




பாதுகாப்பு, நம்பிக்கை

சௌகரீகம்

இத் தனிச் சிறப்புக்கள், இலங்கை அடங்கிலுமுள்ள, முதலீடு செய்வோர்களிடையே பொது வழக்குச் சொற்களாகி, ஹவுஸ் அன்ட் புரொப்பேர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்டின் முதலீட்டு திட்டங்களுக்கு சிறந்த மவுசை ஏற்படுத்தியுள்ளன.

நீங்கள் முதலீடு செய்யும்போது உங்கள் பணத்திற்கு சம்பூரணமான முதலீட்டு பாதுகாப்பு அளிக்கப்படுகிறதா என்பதையும் அவ்வாறான முதலீடு, சராசரி வருமானத்திற்கு மேற்பட்ட வருமானத்தையும் உத்தரவாதங்களையும், தனிப்பட்ட விசேஷ சேவை வசதியையும் அளிக்கிறதா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். இவ் வசதிகளை எம்மிடம் முதலீடு செய்வோர் சுமார் இருபது ஆண்டுகளாக பெற்று இன்புற்றுவருகிறார்கள்.

முதலீட்டுத் திட்டங்கள்

| குறுகிய காலம் | நீண்ட காலம் | கால வைப்புகள் |
|---|---|---|
| 12% | 17½% | 18% |
| "முதலீட்டு சான்றிதழ்" வட்டியுடன் முதலீடு செய்த பணத்தை வட்டியுடன் இலகுவில் மீட்டுக்கொள்ளலாம். | 1 வருடம் - 14 1/2% வருடமொன்றுக்கு<br>2 வருடம் - 15% வருடமொன்றுக்கு<br>3 வருடம் 15 1/2% வருடமொன்றுக்கு<br>4 வருடம் - 16% வருடமொன்றுக்கு<br>5 வருடம் - 16 1/2% வருடமொன்றுக்கு<br>6 வருடம் - 17 1/2% வருடமொன்றுக்கு<br>முதலீட்டை அனுகூலங்களுடன் மீட்டுக் கொள்ளலாம். | 6 மாதங்கள் - 12% வருடமொன்றுக்கு<br>12 மாதங்கள் - 15% வருடமொன்றுக்கு<br>18 மாதங்கள் - 18% வருடமொன்றுக்கு<br>முதலீட்டை அனுகூலங்களுடன் மீட்டுக் கொள்ளலாம். |
| மாதாந்த வட்டி | மாதாந்த வட்டி | முதிர்ச்சியின் பேரில் வட்டி |

ஹவுஸ் அன்ட் புரொப்பேர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்,
HPT பில்டிங், கொழும்பு-8 த. பெ. இல. 1077.
ரெலெக்ஸ்: 1203 கொழும்பு. போன்: 94356. 94320

கிளை அலுவலகங்கள்;
★ 2 - 8, நவீன சந்தை, பெரியகடை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7698
★ 8, புத்தளம் ரோட், குருனாகல்.

(RAVI)


## வல்லரசாகும் நோக்கம் ஜப்பானுக்கு கிடையாது

### பிரதமர் புக்குடா அறிவிப்பு

வாஷிங்டன், மே 5

இராணுவபலம் கொண்ட வல்லரசாகும் நோக்கம் ஜப்பானுக்குக்கிடையாது என்று ஜப்பானிய பிரதமர் திரு. தக்கியோ புக்குடா வாஷிங்டனில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் உத்தியோகபூர்வவிஜயத்தை மேற்கொண்டுள்ள திரு. புக்குடா பத்திரிகை நிருபர்கள் மத்தியில் மேலும் கூறியுள்ளதாவது:

"தற்போது உலகில் தோன்றியுள்ள பொருளாதாரநெருக்கடி உலகின் சமாதானத்தையும் பொருளாதாரத்தையும் பெரிதும் பாதிப்பு அடையச்செய்துவிடும். எனவே பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க உலக நாடுகள் ஒருங்கிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்." (இ)

## புரட்சி எதிர்ப்பாளர் விபரம் கோருகிறது ஆப். அரசு

காபூல், மே. 5

ஆப்கானிஸ்தானில் கடந்த 27ம் திகதி இடம்பெற்ற இராணுவப்புரட்சிக்கு எதிர்ப்புக் காட்டியவர்களின் விபரங்களை புதிய ஜனநாயகக் குடியரசு சேகரித்து வருகிறது.

புரட்சிக்கு எதிர்ப்புக்காட்டியவர்களின் விபரங்களைத் தமக்கு அறிவிக்குமாறு புதிய அதிபர் ஜனப் நூர் மூகம்மது டராகி பொதுமக்களைக் கேட்டுள்ளார். (இ)

## மனித உரிமைகள் சங்கம் வேண்டுகோள்

லண்டன், மே. 5

ஆப்கானிஸ்தான் புரட்சியை அடுத்து கைதாகி காவலில் இருக்கும் அரசியல் கைதிகளை உடன் விடுதலைசெய்யுமாறு லண்டனிலுள்ள சர்வதேச மனித உரிமைகள் ஸ்தாபனம் ஆப்கானிஸ்தான் புதிய ஜனநாயகக் குடியரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

புரட்சியின்போது கொல்லப்பட்டவர்களின் விபரத்தையும் மனித உரிமைகள் சங்கம் கோரியுள்ளது. (இ)

## புதிய மருந்து

லண்டன், மே. 5

பிரிட்டிஷ் மருத்துவத்துறை விஞ்ஞானிகள் இரத்த அழுத்தத்தைக் குணப்படுத்தும் புதிய மருந்தொன்றைக் கண்டுபிடித்துள்ளனர்

பொதுப் பாவனைக்கு இம்மருந்து இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு அனுமதிக்கப்படமாட்டாது. இரத்தஅழுத்த நோய் கடுமையான சமயங்களிலேயே இம்மருந்து பயன்படுத்தப்படுமாம்.

## இடிஅமின் சீற்றம்

உகண்டா, மே. 5

கனடாவில் நடைபெறவுள்ள பொதுநலவமைப்பு நாடுகளின் விளையாட்டுப் போட்டிக்குத் தமக்கு அழைப்பு விடுக்கவில்லை என்று உகண்டா அதிபர் ஜெனரல் இடிஅமின் கனடா மீது சீற்றம் கொண்டுள்ளார்.

பொதுநல அமைப்புநாடுகள் சங்கத்திலிருந்து கனடாவை வெளியேற்ற வேண்டுமென அவர் கூறியுள்ளார். (இ)

## இந்தியாவிலிருந்து ஹஜ் யாத்திரிகர்

புதுடில்லி, மே. 5

இந்தியாவில் இவ்வருடம் 20 ஆயிரம் ஹஜ் யாத்திரிகர்களுக்கு அனுமதி வழங்கப்படுமென்று இந்திய அரசு அறிவித்துள்ளது. (இ)

## பொன்விழா

(அரியாலை)

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் பொன்விழா எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவிருக்கிறது. கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், கல்லூரி மாணவர் பெற்றோர், அபிமானிகள் ஆகியோரின் அனுசரணையுடன் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் இயற்றமிழ்ப் போட்டிகள், இசைப்போட்டி, நாடகப் போட்டி, நடனப் போட்டி, விளையாட்டுப் போட்டி என்பன மிகவும் பரந்த அளவில் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (உ)

## லண்டனில் இலங்கை பிரதிநிதிமந்திரி

லண்டன், மே 5

பொதுநல அமைப்பு பாராளுமன்றச் சங்கத்தின் பிரிட்டிஷ் கிளையின்விருந்தினர்களாக 16 நாடுகளைச் சேர்ந்த 20 பொதுநல அமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரிட்டனில் மூன்று வாரகால விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இவர்களில் இலங்கை பிரதிநிதி அமைச்சர் திரு ஷெல்டன் ரணராஜாவும் ஒருவராவார்.

இவ்வாரம் பாராளுமன்றத்தின் இருசபைகளுக்கும்சென்று விவாதங்களை அவதானிப்பர். அத்துடன் சங்கத்தின் பிரிட்டிஷ் கிளை உறுப்பினர்களையும் சந்திப்பர்

லண்டனில் இருக்கும் வேளையில் குழுவினர் பொதுநல அமைப்பு செயலகம், பொதுநல அமைப்பு ஸ்தாபனம், வெஸ்ட்மினிஸ்டர் அரண்மனையில் உள்ள பொதுநல அமைப்பு பாராளுமன்றச் சங்க தலைமை அலுவலகம் ஆகியவற்றுக்கு விஜயம் செய்வர். இந்த விஜயம் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படுவதாகும். (இ)

## லெனினின் நூல்கள் 50 கோடி பிரதிகள் பிரசுரம்

யுனெஸ்கோ ஸ்தாபன மதிப்பீட்டின்படி மொழிபெயர்க்கப்பட்ட நூல்களில் லெனினினது படைப்புக்களே உலகில் முதலாவது இடத்தை வகிக்கின்றன. சோவியத் ஆண்டுகளில் அதாவது 1917 ஆண்டிலிருந்து சோவியத் யூனியன் மற்றும் வெளிநாடுகளில் உள்ள மக்களின் 109 மொழிகளில் 13,473 தடவைகள் லெனினினது நூல்கள் பிரசுரம் செய்யப்பட்டன. அவற்றின் மொத்தப் பதிப்பு 51 கோடியே 75 லட்சம் பிரதிகளாகும். 1977ம் ஆண்டில் மாத்திரம் லெனினினது 412 நூல்கள் 172 லட்சம் பிரதிகளாக சோவியத் யூனியனில் பிரசுரிக்கப்பட்டன. அவரது நூல்கள் யூனியன் மற்றும் சுயாட்சிக் குடியரசுகளில் பிரசுரிக்கப்படுகின்றன. (இ)

## இடமாற்றம்

(சங்கானை)

டெனியாய சாந்த மத்தேயு வித்தியாலயத்தில் கடமையாற்றிய திரு எஸ். குணபாலசிங்கம் ஆசிரியர் சண்டிலிப்பாய் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார். (உ)

நாகம்ஸ்
(கன்னாகம்)
தினசரி
6-45, 10-00
விஜயகுமார்
நடித்த
தாயில்லாக்குழந்தை

வெலிங்டன்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45
நாகேஷ்-விஜயலலிதா
நடித்த
தேன் கிண்ணம்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜோதி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ போன்: 7692
(யாழ். நகர்)
எம். ஜி. ஆர்.—அஞ்சலிதேவி
மர்மயோகி

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன்
நடித்த
ஜானகி சபதம்

Regal (Jaffna) 2nd Crowded Week
Daily 4-45, 7-00 and 9.30 p m.
TONY CURTIS ROGER MOORE in
SPORTING CHANCE
(Color) (Spy Film)

வெற்றிகரமான 2-வது மாதம்
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.—வாணிஸ்ரீ
நடித்த
ஊருக்கு உழைப்பவன்

6-வது வெற்றி வாரம்
ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. ஈ. மனோகரன்-சந்திரகலா
வாடைக்காற்று

12-ம் திகதி முதல் · சிவாஜி — மஞ்சுளா
நடித்த
உ த் த ம ன்

சில தினங்கள் மட்டும்
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி.ஆர்., விஜயா, நாகேஷ்
நடித்த
நல்லநேரம்

## நிர்வாகிகள்

(வண்ணார்பண்ணை)

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எம். தம்பிமுத்து தலைமையில் நடைபெற்ற மண்டைதீவு கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்புப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. அ. ஜெயகுணதிலகம், செயலாளர்: திரு. அ. ஸ்ரீமத்மராஜா, பொருளாளர்: திரு. ஏ. எஸ். சோமசுந்தரம், உபதலைவர்: திரு. க. குலசிந்தாமணி, உபசெயலாளர்: திரு. கனகசபாபதி.

### தர்மகர்த்தா சபை

(கரணவாய்)

பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையின் நடப்பு வருட அலுவலர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: க. இராமநாதன், உபதலைவர்: வி. ஏரம்பமூர்த்தி, இணைக்காரியதரிசிகள்: ந. கிருஷ்ணராஜா, வி. தங்கவடிவேலாயுதசாமி, தனாதிகாரி: அ. நடராத்தினம்.

மற்றும் 27 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. (உ)

### திருப்பணிச்சபை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கிழக்கு இராமலிங்கம் ஜேட் வாலை அம்மன் ஆலய திருப்பணிச் சபையின் முதலாவது கூட்டம் ஆலய முன்றலில் திரு. மு. க. சின்னையா தலைமையில் கூடிய போது பின்வருவோர் நிர்வாக சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஆ. சுப்பிரமணியம், உபதலைவர்கள்: மு. க. சின்னையா, இ. சீனிவாசகம், செயலாளர்: வை. இராமநாதன், உபசெயலாளர்: க. சுப்பிரமணியம், பொருளாளர்: வை. இராமலிங்கம், சட்ட ஆலோசகர் திரு. மு. ஆனலசுந்தரம்.

பத்துப்பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (கா-இ)

### நியமனம்

[யாழ்ப்பாணம்]

நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த திரு. மருதப்பு இராமலிங்கம் சுகாதார அமைச்சினால் நெடுந்தீவு வைத்தியசாலையின் உத்தியோகப்பற்றற்ற பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

Rio (Jaffna) Daily 4 Shows
ALLAIN DELON
in
Purple Noon
Action (Color)

யாழ்ப்பாணப்பகுதி

## பாண் விநியோகம்: நீதவான் கண்டனம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பகுதியில் பாண் விநியோகம் சுகாதாரத்திற்குக் கேடு விளைவிப்பதாக உள்ளது என்று யாழ் நீதிமன்ற நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் கண்டனம் தெரிவித்தார்.

யாழ். நீதிமன்றத்தில் சுகாதாரமற்ற முறையில் இனிப்புப் பண்டங்கள் தயாரித்ததாக ஒருவருக்கு எதிராக யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியினரால் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு 50 ரூபா அபராதம் விதித்தபோதே நீதவான் மேற்கண்டவாறு கண்டனம் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

யாழ்ப்பாணம் பகுதியில் பாணை கடைகளுக்கு விநியோகம் செய்ய எடுத்துச் செல்லும் போது அவற்றை திறந்தபடியும் வாகனங்களின் ஆசனங்களிலும் ஆசனங்களுக்கு அடியிலும் மற்றும் தாம் விரும்பும் இடங்களிலும் வைத்துக் கொண்டு செல்வதை நான் நாள்தோறும் காணக்கூடியதாக இருக்கிறது.

சாதாரண இனிப்புப்பண்டங்களால் ஏற்படும்தொற்று நோய் விளைவுகளைக் காட்டிலும் பாண் விநியோகத்தால் ஏற்படும் தொற்று நோய் விளைவுகள் மிக அதிகம் எனவே இத்தகைய விஷயத்தில் கவனம் செலுத்திய யாழ் மாநகர சபைப்பகுதியினர் பாண் விநியோகத்தில் பூரண கவனம் செலுத்தவேண்டும். இதுபற்றி யாழ் ஆணையாளருக்கும் தெரியப்படுத்த வேண்டும். (கா-இ)

## ட்ராக்டரால் விழுந்தவர் ஆஸ்பத்திரியில் மரணம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு தண்ணீர் விநியோகிப்பதற்காக ட்ராக்டர் மூலம் பவுசரில் தண்ணீர் கொண்டு சென்ற ஒருவர் அந்த ட்ராக்டரில் இருந்து வீழ்ந்து மரணமானார்.

ஸ்ரானிஸ்லி, ஒகஸ்தீன் என்பவரே இவ்வாறு மரணமானவர் ஆவார். சரம்பவிலிருந்து ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரிக்கு தண்ணீர் விநியோகிப்பதற்காக கொண்டு வந்த ட்ராக்டரில் இருந்த பவுசரின் மேல் இறந்தவர் இருந்து கொண்டு வந்தாராம். ஆஸ்பத்திரிக்கு அண்மையில் வந்த போது பவுசரில் இருந்து தவறிக் கீழே விழுந்துவிட்ட அவரை உடனடியாக ட்ராக்டர் சாரதி கந்தையா தில்லையா ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றுர் பின்னர் அங்கிருந்து யாழ். பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு மரணமானுர்.

இம் மரணம் தொடர்பாக மரணவிசாரணை நடத்திய யாழ். திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு எஸ் அமிர்தலிங்கம் விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார் (கா)

## மீன் கொள்வனவு நிலையம் வேண்டுமாம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு வாவியின் வலையிறவுப் பகுதியில் சமீபகாலமாக இறால் பெருமளவில் பிடிக்கப்படுகின்றது. பிடிக்கப்படும் இறாலை மீனவர்கள் தனியாருக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்யவேண்டியிருப்பதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் வவுணதீவுப் பிரிவு ஒரு கிளைச் சங்கமாகவிருந்து இப்பகுதி அங்கத்தவர்கள் தாம் பிடிக்கும் ஆற்று மீன்வகைகளையும், இறால்களையும் தனியாருக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்யும் நிலையில் உள்ளார்கள். மேற்படி சங்கம் இப்பகுதி மீனவ அங்கத்தினர்களின் நயன்கருதி இறால், மீன் கொள்வனவு நிலையமொன்றை ஆரம்பிப்பதற்கு ஆவன செய்தல் வேண்டுமென கோரப்படுகின்றது. [உ]

## சித்தாயுர்வேத நூல் விபரப் பட்டியல்

(பேராதனை)

தேசிய விஞ்ஞான சபையின் ஆதரவுடனும் உதவியுடனும் சித்தாயுர்வேதவிபரம் பட்டியலும் சுதேச வைத்திய கையேடும் ஆக்கப்பட்டு வருகின்றன. இக் கையேட்டில் தமது பெயரும் தொழில் நடத்தும் முகவரி முதலிய தொழில் விபரங்களும் இடம்பெற விரும்பும் வைத்தியர்கள் அவற்றை, சிரேஷ்ட துணை நூலகர், நூலகம், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை வளாகம், பேராதனை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். அத்துடன் தம்மிடம் உள்ள அரிய நூல்களின் விபரங்களையும் அனுப்பினால் அவையும் நூல் விபரம் பட்டியலில் சேர்க்கப்படும். இவை பின்னர், தேசிய விஞ்ஞான சபையினரால் பிரசுரிக்கப்படலாம். என்று பேராதனை வளாக துணை நூலகர் திரு. இ. முருகவேள் தெரிவிக்கிறார்.

## புதிய உறுப்பினர்கள்

[வட்டுக்கோட்டை]

காரைநகர் வடக்கு த. வி. கூட்டணிக்கிளையின் புனரமைப்பதற்கான கூட்டம் திரு. நாக. பத்மநாதன் தலைமையில் சித்தன்கேணி கூட்டணிக்காரியாலயத்தில் நடைபெற்றது: பின்வருவோர் புதிய உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. க. சிற்றம்பலம் உபதலைவர் திரு. ஆ. மகாலிங்கம், செயலாளர் திரு. இ. ஐயாத்துரை, உப-செயலாளர் திரு. செ. மார்க்கண்டு, தனாதிகாரி திரு. கா. சோமசுந்தரம். [உ]

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கலைமாமணி முத்துராமன் — சந்திரகலா — ஸ்ரீவித்யா — விஜயகுமார்
அசோகன் — தேங்காய் சீனிவாசன் —மனோரமா —
சி. ஐ. டி. சகுந்தலா, மற்றும் பலர் நடித்த
காலங்களில் அவள் வசந்தம்
தன் சகோதரிக்காக தன் வாழ்க்கையையே தியாகம் செய்த
மங்கையர் திலகத்தின் உருக்கமான கதை.
தென்னகத்தில் 100 நாட்களுக்குமேல் ஓடிய ஒரு வெற்றிப் படைப்பு
புரட்சி டைரக்டர் எஸ். பி. முத்துராமனின்
மற்றுமோர் உன்னதமான சித்திரம்
நீங்கள் வெகு நாட்களாக ஆவலுடன்
எதிர்பார்த்திருந்த ஒரு குடும்பக் காவியம்

சாந்தி (யாழ். நகர்), போன்: 7648
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி ஜமுனா
மருதநாட்டு வீரன்
— புத்தம் புதிய பிரதி —
நிதியுதவிக் காட்சி காலை 10-30, பி.ப. 2-30
"அரச கட்டளை"
6-ம், 7-ம் திகதி காலை 8-30 மணிக் காட்சி மட்டும்.
THE THREE FAT MEN
— Comedy —

இ. போ. ச. நிர்வாகத்தைப்

# பரவலாக்கும் திட்டம் மைத்திரி கண்டனம்

(கொழும்பு)

தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கைப் போக்குவரத்துச்சபை நிர்வாகத்தைப் பரவலாக்கும் சட்டமூலத்தில் உத்தேச பிராந்திய சபைகளின் ஆலோசனையின் பேரில் தனியாருக்கும் பஸ்சேவையை நடத்த அனுமதிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. இது முன்னர் பஸ் கம்பனி காலத்தில் இருந்து வந்ததுபோல் மோசமான நிலையே உருவாக்கும்.

இவ்வாறு மதவாச்சி எம்.பி. திரு. மைத்திரிபாலசேனநாயக்கா தேசிய அரசுப் பேரவையில் கூறினார். மேற்படி சட்டமூலம் மீதான விவாதத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இ. போ. ச. நிர்வாகம் பரவலாக்கப்பட வேண்டியது அவசியம்தான் ஆனால் அது வேறு விதத்தில் பரவலாக்கப்பட வேண்டும்.

பொறியியல் பிரிவு நிர்வாகப் பிரிவு, விநியோகப்பிரிவு என நிர்வாகத்தைப் பரவலாக்கலாம்.

டிக்கற் இன்றி பிரயாணம் செய்யும் பிரயாணிகளுக்கு அபராதத் தொகையாக ஒரு இடத்தில் 30 ரூபாவும் வேறொரு இடத்தில் 100 ரூபாவும் விதிக்கலாம் என்று சட்டமூலத்தில் கூறப்பட்டுள்ளது. இதுபற்றி அமைச்சர் விளக்கமாகக் கூறவேண்டும்.

### நல்லூர் சிவாஉரை

நல்லூர் எம்.பி. திரு எம். சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:

இ போ ச நிர்வாகம் பரவலாக்கப்படுவதை நாமும் வரவேற்கிறோம். இது குறித்து நாம் ஏற்கனவே வலியுறுத்தி வந்துள்ளோம்.

உத்தேச பிராந்திய சபைகளை அமைப்பதற்கான பிராந்தியங்களே சரியான முறையில் பிரிக்கவேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் வாடகைக்காரர் சேவை, பொருட்கள் ஏற்றி இறக்கும் சேவை, படகுச் சேவை ஆகியவற்றையும் நடத்தவுள்ளதாகவும் சட்ட மூலத்தில் கூறப்பட்டுள்ளது. இது குறித்து விளக்கமாக எதுவும் கூறப்படவில்லை.

உத்தேச பிராந்திய சபைகளில் போக்குவரத்துத் துறையில் அனுபவமும் திறமையும் வாய்ந்த உறுப்பினர்களையே நியமிக்கவேண்டுமென்றும் திரு. சிவசிதம்பரம் கேட்டுக்கொண்டார். (மதி)

# நெல்லியடி பஸ்நிலையத்தில் பிரயாணிகள் அவதி

(உடுப்பிட்டி)

வடமராட்சிப்பகுதியில் கேந்திர பஸ்நிலையமாக விளங்கும் நெல்லியடி பஸ்நிலையத்தில் பிரயாணிகள் தங்குவதற்கான வசதிகள் இல்லாமை பஸ்பிரயாணிகளும் பொது மக்களும் பெரும் சிரமமும் கஷ்டமும் அனுபவித்து வருகின்றனர்.

இந்த பஸ் நிலையத்தினூடாக திருகோணமலை முல்லைத்தீவு முத்தையன்கட்டு வெடிகாமம், சாவகச்சேரி யாழ்ப்பாணம் போன்ற நகர இடங்களுக்கு பஸ் வண்டிகள் சேவையிலீடுபட்டு வருகின்றன.

இந்நிலையம் திறந்து வைக்கப்பட்டு ஆறு வருடங்களுக்கு மேலாகியும் பிரயாணிகள் தங்குவதற்கான வசதியை இ போ ச சபையோ அல்லது நெல்லியடிப் பட்டின சபையோ அமைத்துக் கொடுக்காதது பற்றி பஸ் பிரயாணிகள் அதிருப்தியும் கவலையும் தெரிவித்து வருகின்றனர். (அ)

# யாழ். வளாக தமிழ்விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாக தமிழ் மன்றத்தின் தமிழ் விழாவின் ஆரம்ப நாளான இன்று மன்றத் துணைத் தலைவர் திரு. மு. சிவதாஸ் தலைமையில் நடைபெறும். காலை நிகழ்ச்சிகளுக்கு பிரதம விருந்தினராக யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தனும், சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் திரு. ஆர். அரசரத்தினமும் கலந்துகொள்வார்கள்.

காலை 9 மணிக்கு ''தாயினைனும் நல்வாழ்வு'' என்னும் கவியரங்கு வளாக மாணவி செல்வி மாலினி கந்தசாமி தலைமையில் நடைபெறும்.

பகல் 10-30 மணிக்கு ''தமிழர் வாழ்வும் வளமும்'' என்னும் தலைப்பில் மன்றப் பொருளாளர் திரு. இ. முத்துத்தம்பி தலைமையில் இடம்பெறும் ஆய்வரங்கில் வரலாற்றுப் பகுதிப் பேராசிரியர் திரு. கா. இந்திரபாலாவும், புவியியல் பகுதிப் பேராசிரியர் திரு. சிவா அட்சணமூர்த்தியும், பொருளியல் பகுதி விரிவுரையாளர் திரு. என். பாலகிருஷ்ணனும், இலக்கியப்பகுதி விரிவுரையாளர் திரு. நா. சிவசுப்பிரமணியமும் கலந்துகொள்வார்கள்.

பிற்பகல் 1-00 மணிக்கு ''தமிழர் வாழ்வும் வளமும்'' என்ற பொருட்காட்சியை முன்னாள் மன்றத்தலைவர் திரு. இ. சி. செல்வேந்திரன் திறந்துவைப்பார்.

மாலைக் கலைநிகழ்ச்சிகளுக்கு பிரதம விருந்தினராக விலங்கியற்றுறைத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் கலந்துகொள்வார் இன்னிசை நிகழ்ச்சிகளும், வீணை இசைகளும். நடனமும் நாடகமும் இடம்பெறும். (கா)

# டாக்டர்கள் கோரிக்கை

(உடுப்பிட்டி)

இந்தியன் எம். பி. பி. எஸ். பட்டம் பெற்ற டாக்டர்கள் சகலருக்கும் இலங்கையில் வாய்ப்பளிக்க வேண்டுமென்று இந்தியன் எம். பி. பி. எஸ். பட்டம் பெற்றோர் அரசாங்கத்தைக் கோரியுள்ளனர் இவர்களுக்கும் பகுதிநேர வேலை வாய்ப்பளித்து அங்கீகரிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

# வெளிநாட்டில்...

(1-ம் பக்க தொடர்ச்சி)

இந்த இரண்டு ஆண்டுகளுக்குள் இவர்கள் தமது தாய்மொழியில் கல்விபெறும் தகுதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அதன்பின் தமது தாய்மொழியிலேயே இவர்கள் கல்வியைத் தொடரலாம்.

கல்வி அமைச்சர் திரு. நிஸ்ஸங்கா விஜயரத்தின இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

வெளிநாட்டில் அதிககாலம் தங்கியிருந்துவிட்டு இப்போது தாயகம் திரும்புவதற்கு விருப்பம்கொண்டுள்ள இலங்கையர் வெளிநாட்டில் தம்முடன் தங்கியுள்ள குழந்தைகளின் கல்வி குறித்து கவலை கொண்டிருக்கிறார்கள் என்றும் இவர்களின் கவலையை நீக்கும் வகையிலேயே மேற்படி சலுகையை வழங்க தாம் முடிவு செய்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தாய்மொழியில் தகுதி பெறுவதற்கு இவர்களுக்கு இரண்டு ஆண்டு சலுகை போதுமானது என்றும் மிகவும் இறிய வயதினை குழந்தைகள் தாய்மொழியிலேயே கல்வியை ஆரம்பிக்க முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# 'மூன்று முடிச்சு' மூலம் நிதியுதவி

(கோத்திரபுரம்)

கிளிநொச்சி லயன்ஸ் கழகம், அகதிகள் புனர்வாழ்வு நிதிக்காக நிதியுதவிப் படக்காட்சியொன்றை நடத்துவதெனத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது

லயன்ஸ் கழக இலங்கை மாவட்ட கவர்னர் ஒஸ்மன்ட் சில்வா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், இந் நிதியுதவி படக்காட்சியை கிளிநொச்சி ஈஸ்வரன் படமாளிகையில் எதிர்வரும் 13ந் திகதி நடாத்துவதெனவும் முடிவு எடுக்கப்பட்டது.

''மூன்று முடிச்சு'' என்ற திரைப்படம் திரையிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# தலைநகரில் மேதினம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்வலம் கொட்டா ரோட் மைதானத்தில் ஆரம்பமானது இயக்கத்தின் முக்கிய தலைவர்களான விஜேவீர. உபதிஸ்ஸ கமநாயக, லயனல் போபகே ஆகியோர் செங்கொடிகளைத் தாங்கிச்சென்றனர்.

''சகல மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்குவோம்'', ''தொழிலாளர் ஆட்சியை ஏற்படுத்துவோம்'' என்ற சுலோகங்களைக் கோஷித்த வண்ணம் ஏந்திச்சென்றனர். ஊர்வலம் நகரசபை மைதானத்தை அடைந்தது.

0 0 0

மக்கள் ஐக்கிய முன்னணி ஊர்வலம் கொழும்பு கொம்பனித்தெரு நியூஹாம் மைதானத்தில் ஆரம்பமாகியது.

ஊர்வலத்தை தலைவர் திரு தினேஷ்குணவர்த்தன தலைமை வகித்து நடத்திச் சென்றார்.

அரிசி, சீனி அபகரித்தார்கள். ஆசிரியர் மாணவர்களைப் பழிவாங்கினார்கள். எட்டுருத்தல் தானியம் எங்கே'' என்ற கோஷங்கள் ஊர்வலத்தில் இடம்பெற்றன.

ஊர்வலம் வாழைத்தோட்ட மைதானத்தை அடைந்தது.

0 0 0

தீவிர இடதுசாரி முன்னணியின் ஊர்வலம் பௌத்தாலோக மக்கள் சந்தையில் ஆரம்பமாகியது. ஊர்வலத்திற்கு திரு. வாசுதேவநாணயக்கார, திரு. என். சண்முகதாஸன், திரு நந்தா எல்லவெல ஆகியோர் தலைமை தாங்கி வழிநடத்திச் சென்றனர். பஞ்சிகாவத்தை மைதானத்தை அடைந்தார்கள்.

0 0 0

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் ஊர்வலம் கொம்பனித்தெரு டிமெல் பார்க்கில் ஆரம்பமாகி கொள்ளுப்பிட்டியிலுள்ள தலைமைக்காரியாலயத்தை திரு பாலா தம்புவின் தலைமையில் அடைந்தது.

0 0 0

புரட்சிக் கம்யூனிஸ்ட் கட்சியும் இளம் சோஷலிஸ்டுகளும் இணைந்த மேதின ஊர்வலம் காலை 9 மணிக்கும் கொட்டாஞ்சேனை இரத்தினம் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகி தெமட்டகொட விளையாட்டு மைதானத்தை அடைந்தது.

இந்த ஊர்வலத்தில் திரு. கீர்த்திபாலசூரியா தலைமை வகித்து நடத்திச் சென்றார்.

ஐக்கியதேசியக் கட்சியும் அதன் ஜாதிகாசேவா தொழிற்சங்கமும் இணைந்து கலாசார விழாவாக மேதினத்தைக் காலிமுகத்திடலில் கொண்டாடின.

இந்தியாவிலிருந்து வருகை தந்த கலைஞர்களும், இலங்கையின் புகழ்பெற்ற பாடகர்களும் இதில் கலந்து சிறப்பித்தார்கள். விமான சாகஸ நிகழ்ச்சியும் நடைபெற்றது. (அ)

# சைக்கிள் ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலத்தில் யாழ். பொலிஸ் பகுதியில் களவாடப்பட்டதாகக் கைப்பற்றப்பட்டு இதுவரை உரிமை கோரப்படாத 73 பல இன சைக்கிள்கள் இன்று யாழ் நீதிமன்ற வளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

கைப்பற்றப்பட்ட சைக்கிள்களின் இனம், ரகம் இலக்கம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு சகல பொலிஸ்நிலையங்கள், உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டும், இதுவரை உரிமை கோராமையினால் ஏலத்தில் விடுவதற்கு முடிவுசெய்யப்பட்டது. (கெ)

# இன்றைய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வாராந்தக் கருத்தரங்கு இன்று மாலை தமிழர் விடுதலைக் கூட்டணி பணிமனையில் யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இன்றைய கருத்தரங்கில் ''தமிழ் ஈழ இறைமையும், சுய நிர்ணய உரிமையும்'' என்னும் தலைப்பில் இளைஞர் பேரவைச் செயலாளர் மாவை சேனாதிராஜா உரையாற்றுவார். (கெ)

°° °° °°

(யாழ்ப்பாணம்)

அரசாங்க பொது சேவை தொழிற்சங்க - கல்விப்பகுதிக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று காலை யாழ். பாரதி பாலர் வித்தியாசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. எஸ். ஏ. அமரதாஸா தலைமையில் நடைபெறும்.

இன்றையக் கூட்டத்தில் கல்வித்திணைக்களம் நடைமுறைப்படுத்தத் தவறிய பல பிரச்சினைகள் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். (கெ)

# இ. போ. ச.

(1-பக்க தொடர்ச்சி)

பல் கட்டணங்களை நாடு பூராவும் ஒரே சீராக்குவது தொடர்பாக ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட விருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பொதுநிர்வாக உள்நாட்டமைச்சர் திரு. மொண்டேகு ஜயவர்த்தன பேசும்போது 20 ஆண்டுகளுக்கு முன் இ. போ. ச. உருவாக்கப்பட்டபோதே இத்திட்டத்தை அமுல்செய்யத் தவறியதின் காரணமாக போக்குவரத்துச் சபை பெருநஷ்டத்தை எதிர்நோக்க நேர்ந்தது என்றார்.

# சென்னையில் செல்வா அஞ்சலி

சென்னை, மே 5

தந்தை செல்வா நினைவாஞ்சலி அனைத்துக்கட்சிப் பொதுக்கூட்டம் சென்னையில் தமிழ் ஈழநாட்டுறவுக் கழகத்தின் ஆதரவில் தந்தை பெரியார் திடலில் திரு ந அரணமுறுவல் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் திருவாளர்கள் திருஆற்காடு என். வீராசாமி (தி. மு. க), கவிஞர் இ. முத்துராமலிங்கம் (அ. இ. அ. தி. மு. க.) புலவர் இந்திரா குமாரி (ஜனதா), தோழர் கே. மாணிக்கம் (இ. கம்யூனிஸ்ட் கட்சி), கே. சடகோபன் (இ காங்கிரஸ்), வழக்கறிஞர் துரைசாமி (திராவிடர் கழகம்), வழக்கறிஞர் மார்க்சபந்து உழைப்பாளர் முன்னேற்றக்கட்சி) திரு மணவைத் தம்பி (ஈழம் குடிபெயர்ந்தோர் நலவுரிமைச் சங்கம்) ஆகியோர் உரைநிகழ்த்தினர்.


தேவை

மருது ''கும்புக்'' மரம் 500 கன அடி தேவை. விலை விபரத்துடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.

வர்த்தக முகாமையாளர்,
சீநோர்,
காரைநகர்.

9238



சன்சோனி ஆணைக்குழு சாட்சியங்களை

நிகழ்ச்சி பதிவேட்டில் இருந்து தமிழாக்கித் தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகம் வெளியிட்டு வருகின்றது.

ஆவணி அமளி

என்ற தலைப்பில் முதல் இரண்டு காதைகள் வெளிவந்துள்ளன.

ஆவணி அமளி 2

தமிழாக்கம்: க. சச்சிதானந்தன்
விலை: 4-50. வி. பி. பி. உண்டு.
வியாபாரிகட்குக் கழிவு.

காந்தளகம்

213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மே மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram : Eelanadu Telephone 389 Registered as a Newspaper in Sri Lanka